# தமிழ்ப் பல்கலைக்கழகம்

# தஞ்சாவூர் - 613010

# NAAC B+

## தொலைநிலைக் கல்வி இயக்ககம்

(புதுதில்லி பல்கலைக்கழக நல்கைக்குழு மற்றும் தொலைநிலைக் கல்விக் குழுமம் (DEB) அங்கீகாரம் பெற்ற முதன்மைப் பல்கலைக்கழகம்)

# விவரக்கையேடு

# 2019 கல்வியாண்டு


தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தொலைநிலைக் கல்வி இயக்ககம்,
வாகை வளாகம், திருச்சி சாலை.
தஞ்சாவூர் - 613 010

# தொலைநிலைக்கல்வி இயக்ககம்

(புதுதில்லி பல்கலைக்கழக நல்கைக்குழு(DEB)அங்கீகாரம் பெற்றது)

## விவரக் கையேடு 2019 -20

- முதுநிலைப் பட்டம்
- தொழில்முறைப் பட்டம்
- முதுநிலைப் பட்டயம்
- பட்டயம்
- சான்றிதழ்
- அடிப்படைக்கல்வி
- அறிமுகநிலைப் படிப்பு

**ஆங்கில மொழிப்பாடம் தவிர அனைத்துப் பாடங்களும் தமிழ்வழியில் மட்டுமே நடத்தப்படும்**

மாணவர்கள் ஒரே சமயத்தில் கீழ்க்காணும் படிப்புகளைத் தொலைநிலைக்கல்வி வழி பயிலலாம்.

* ஒரு பட்டப்படிப்புடன் ஒரு பட்டயம் / முதுநிலைப் பட்டயம் / சான்றிதழ்
* ஒரு முதுநிலைப் பட்டயத்துடன் ஒரு பட்டயம் / சான்றிதழ்
* ஒரு பட்டயத்துடன் ஒரு சான்றிதழ் படிப்பு
* இரண்டு முதுநிலைப் பட்டயப் படிப்புகள்
* இரண்டு பட்டயப் படிப்புகள்
* இரண்டு சான்றிதழ் படிப்புகள்

## *தமிழ்ப் பல்கலைக்கழகம்*

**வாகை வளாகம், திருச்சி சாலை, தஞ்சாவூர்-613 010**

தொலைபேசி

விண்ணப்பங்கள், பாட நூல்கள் தொடர்பான விவரங்களுக்கு - தொலைநிலைக்கல்வி இயக்ககம் – 04362-227152, 227434

தேர்வு தொடர்பான அனைத்து விவரங்களுக்கும் - தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகம் – 04362-227845

தொலைநகலி: 04362-226159, 04362-227434

**இணையதளம்:** www.tamiluniversity.ac.in www.tamiluniversitydde.in

# தமிழ்ப் பல்கலைக்கழகம்

**தஞ்சாவூர் 613 010**

**தொலைநிலைக்கல்வி இயக்ககம்**

முனைவர் **கோ. பாலசுப்ரமணியன்**

துணைவேந்தர்

முனைவர் **கு. சின்னப்பன்**

பதிவாளர் (பொ)

முனைவர் **பா. ஜெயக்குமார்**

இயக்குநர் (பொ)

முனைவர் **த. ஆதித்தன்**

கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)

முனைவர் **தி. சிவக்குமார்**

இணைத் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)

# அன்புடையீர்,

தமிழின் தொன்மை, பண்பாடு, கலை, அறிவியல், சமூகம், சமயம், தத்துவம் ஆகியவற்றின் கடந்த கால வரலாற்றை முழுமையான ஆய்வுகளின் மூலம் அறிந்து நிகழ்கால வளர்ச்சிக்கு ஏற்ப தமிழ் மக்கள் ஏற்றம் பெறுவதற்கும் நமது தாய் மொழியின் வளம் உலக மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனும் தொடங்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மற்றொரு அங்கமாகத் தொலைநிலைக்கல்வி இயக்ககம் 2006இல் தொடங்கப்பெற்றது. தமிழ் மக்கள் தமிழ் வழியாக அனைத்துப் பாடங்களையும் கற்றுத் தங்களின் அறிவைப் பெருக்கி வாழ்வில் அனைத்து வளங்களும் பெறுதல் வேண்டும் என்ற வகையிலும் தாய்மொழியில் அனைவரும் கல்வியைப் பெறுதல் வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனும் இக்கல்வித் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

அத்தகைய சீரிய கல்விப் பணியைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடர்ந்து செய்து வருகின்றது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பெறும் தொலைநிலைக் கல்வித் திட்டங்கள் புதுதில்லி பல்கலைக்கழக நல்கைக் குழு அங்கீகாரத்தைப் பெற்ற பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். தமிழ்ப் பாடங்கள், தக்க அறிஞர்களின் வழிகாட்டலில் அமைக்கப்பட்ட கல்வித் திட்டங்கள். தமிழகத்தில் ஒவ்வொரு ஊரிலும் உள்ள எங்களின் கல்வி மையங்களுடன் இணைந்து உங்களின் இல்லங்களைத் தேடி வழங்க வருகின்றோம். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின்வழி கல்விப் பாடங்களில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். அறிவுப் பயனை அடையுங்கள். தமிழ் வழிக் கல்வியையும் தமிழ்மொழியையும் உலகெங்கிலும் பரவச் செய்யும் முயற்சியில் ஈடுபடுவோம்; நீங்கள் பெற்ற பயனை நண்பர்களுக்கும் எடுத்துச் செல்லுங்கள்; தமிழ் மொழி வளப்படும்; இணைந்து செயல்படுவோம்! தொலைநிலைக் கல்வித் திட்டத்தில் சேர்ந்துள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்!

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் கோ. பாலசுப்ரமணியன்
துணைவேந்தர்

# அன்பிற்குரிய மாணவர்களே!

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக்கல்வி இயக்ககம் வழியாக உங்களை இணைத்துக் கொண்டதற்கு எங்களின் இதயங்கனிந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம் நடத்துகின்ற அனைத்துப் பாடத்திட்டங்களும் புதுதில்லியிலுள்ள பல்கலைக்கழக நல்கைக்குழு மற்றும் தொலைநிலைக் கல்விக் குழுமத்தின் அங்கீகாரத்தைப் பெற்றவை என்பதைக் குறிப்பிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். உங்களின் கல்வி மேம்பாட்டிற்குப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககம் உற்ற துணையாக விளங்கும். உங்கள் கைகளில் தவழ்கின்ற எங்களது விவரக் கையேடு உங்களுக்கு வழிகாட்டியாக விளங்கும். மேற்கொண்டு உங்களுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பெறும் தொலைநிலைக் கல்விப் பாடங்கள் மற்றும் அது தொடர்பான பிற விவரங்களுக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும். தொலைநிலைக்கல்வி தொடர்புடைய விவரங்கள் குறித்துச் சொல்வதற்கு இயக்ககம் தயாராக உள்ளது. இணையுங்கள் தொலைநிலைக் கல்விப் பாடங்களில்! செல்லுங்கள் வளர்ச்சிப் பாதையை நோக்கி! தமிழால் இணைவோம்! தமிழால் உயர்வோம்! தமிழ் மொழியை உலகெங்கினும் முன்னெடுத்துச் செல்வோம்!

அன்புடன்

தொலைநிலைக் கல்வி இயக்ககம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

பா. ஜெயக்குமார்
இயக்குநர்(பொ)


தொடர்புக்கு : 04362-227152
தொலைநகலி : 04362-226159,04362-227434
இணையதளம் : www.tamiluniversity.ac.in
www.tamilunivesitydde.in
மின்னஞ்சல் : ddetu2006@gmail.com

முகவரி : இயக்குநர் (பொ)
தொலைநிலைக்கல்வி இயக்ககம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010.

## தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககம் ஓர் அறிமுகம்

உலகின் தலைசிறந்த மொழிகளில் ஒன்றாக விளங்குவது தமிழ் மொழி. தொன்மை வரலாற்றையும் பண்பாட்டையும் பழமையான இலக்கிய இலக்கண வளங்களையும் பெற்ற மொழியாக தமிழ் மொழி விளங்குகிறது. இத்தகு சிறப்பு வாய்ந்த தமிழ் மொழிக்கெனத் தனியாக ஒரு பல்கலைக்கழகம் நிறுவுதல் வேண்டும் என்ற தமிழ் மக்களின் கனவை நினைவாக்கும் முகத்தான் செப்டம்பர் 15,1981 ஆம் ஆண்டு தமிழகத்தின் மேனாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களால் இப்பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. அனைத்துப் பாடத்திட்டங்களும் தமிழ் வழியில் கற்பிக்கப்பட்டு வருகின்றன. உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் எளிதில் தமிழ் வழியில் கல்வியைப் படித்து மேன்மை பெறுதல் வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் தொடங்கப்பட்டதே இத்தொலைநிலைக்கல்வி இயக்ககம்.

தமிழ் மொழி, அவர்தம் பண்பாடு, வரலாறு, சமூகம், சமயம், தத்துவம்,அறிவியல் ஆகியவற்றை உலகெங்கிலும் பரவச் செய்வதற்காகத் தொடங்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகம் தனது 25ஆவது வெள்ளி விழா ஆண்டான 2006-இல் திக்கெட்டும் வாழும் தமிழர்கள் சிறப்பான கல்வி அறிவைத் தமிழ் மொழி வழியாகப் பல்வேறு துறைகளில் பெற வேண்டும் என்ற சீரிய நோக்குடன் தொலைநிலைக் கல்வியைத் தொடங்கியது. கடந்த 13 ஆண்டுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம் தாய் மொழியாம் தமிழில் பல அரிய கல்விப் பாடங்களை அறிமுகம் செய்து வைத்துத் திறம்பட நடத்தி வருகின்றது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி வழியாகப் பயின்று பயனடைந்தோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக்கல்வி வழியாக நடத்தப் பெறும் கல்விப் பாடங்கள் அனைத்தும் புதுதில்லி பல்கலைக்கழக நல்கைக்குழுவின் அங்கீகாரம் பெற்றவை. தொலைநிலைக்கல்வி வழியாகக் கல்வி கற்று வேலை வாய்ப்பைப் பெற்றவர்கள் ஏராளம். தமிழ் மொழியில் அனைத்துக் கல்விப்பாடங்களும் எளிதில் சென்றடைதல் வேண்டும் எனும் நோக்கில் வாழ்க்கைக்கும் வேலை வாய்ப்பிற்கும் பயன் பெறும் வகையில் கல்வித்திட்டங்களை வல்லுநர்களின் வழிகாட்டலில் திட்டமிட்டு உருவாக்கித் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம் மூலம் மாணவர்களுக்குப் பாடங்கள் நடத்தப்படுகின்றன.

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டின் சிறப்பியல்பாகத் தொலைநிலைக்கல்வி இயக்ககம் ஆகஸ்ட் 2006ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்வியக்ககத்தின்கீழ்ப் பல்வேறு பாடப்பிரிவுகள் தொடங்கப்பெற்றுச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

உயர்தரக் கல்வியை உலகிற்குப் பகிர்ந்து அளித்தல், தமிழ் மரபு சார்ந்த கலை அறிவியல் தொழில்நுட்பங்களைத் தலைமுறைகள் பயன்கொள்ள வழிவகை செய்தல், வாய்ப்பு வளம் அமையப் பெறாத சமுதாயத்தினை நோக்கிச் சென்று கல்வி கற்கும் வாய்ப்பினை அமைத்துத் தருதல், மண் வளம், மரபு வளம் கல்வி செயல்முறை அறிவால் காக்கப்படுவதற்கு வழி காணுதல், தமிழர்தம் மரபுவழி சார்ந்த அறிவியல் தொழில்நுட்ப மொழி இலக்கணம், வரலாறு போன்ற நிலைப்பாடுகளின் செவ்வியல் பண்புகளை உலகறியச் செய்தல், தமிழால் முடியும் தமிழனால் முடியும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் எவ்வகை அறிவுத்துறையிலும் விளக்கம் பெற முடியும் என நிறுவுதல் போன்றவை இவ்வியக்ககத்தின் முதன்மைக் குறிக்கோள்களாக அமைந்துள்ளன.

2008ஆம் ஆண்டு முதல் தமிழ்ப் பல்கலைக் கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தில் தமிழ்நாடு முழுவதும் கல்விச் சேவையை வழங்கி வருகிறது. பல்கலைக்கழக நல்கைக்குழுவின் 2017 விதிகளின்படி தமிழ்நாடு முழுவதும் கற்றல் உதவி மையங்கள் (LSC) மூலமாக கல்விச் சேவையை வழங்கி வருகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககம் வாயிலாக நடத்தப்பெறும் அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் புதுதில்லியிலுள்ள பல்கலைக்கழக நல்கைக்குழுவின் (DEB) அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

தொலைநிலைக்கல்வி இயக்ககம் வழி பயில விரும்பும் மாணவர்கள், தொலைநிலைக்கல்வி இயக்ககக் கற்றல் உதவி மையங்களில் அல்லது தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தில் (நேரில்/அஞ்சல்வழி) உரிய தொகையைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ்ப் பல்கலைக்கழக இணையதள வழியாகவும் விண்ணப்பங்களைப் பெற்று, விண்ணப்பப்படிவத் தொகையை *ONLINE PAYMENT* வழியாக செலுத்தி மின்இரசீதினை இணைத்து அனுப்பலாம். மேலும் சேர்க்கைக்கு நேரில் (அ) அருகில் உள்ள கற்றல் உதவி மையத்தை அணுகலாம்.

| தொலைநிலைக்கல்வி இயக்ககம் வழி நடத்தப்பெறும் பாடப்பிரிவுகள் | |
|---|---|
| இளநிலை | இளங்கல்வியியல் (B.Ed) |
| முதுநிலை | தமிழ், வரலாறு, புவியியல், தமிழிசை, பரதநாட்டியம், எம்.பி.ஏ., ஆங்கிலம், சமூகப் பணி, நூலகம் மற்றும் தகவலறிவியல் (எம்.எல்.ஐ.எஸ்), சுற்றுச்சூழல் அறிவியல், வணிகவியல் (எம்.காம்), கணிதம், உளவியல், தாவரவியல், யோகா |
| பட்டயம் | இசை ஆசிரியர் பயிற்சி, யோகா ஆசிரியர் பயிற்சி, பரதநாட்டிய ஆசிரியர் பயிற்சி, பரதநாட்டியம், மூலிகை அறிவியல், மருத்துவ மூலிகை அழகுக் கலை, சோதிடவியல், கோயில்அர்ச்சகர் பயிற்சி, அக்குபஞ்சர், பேச்சுக்கலை, கருவி இசை(வீணை,வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம்), கருவி இசை(மிருதங்கம், தவில்), இசை, மரபுவழித் தமிழ் மருத்துவம், கல்வெட்டியல், கோயிற்கட்டடக்கலை, வரைகலை மற்றும் வண்ணக்கலை, நட்டுவாங்கம், மேடைநிகழ்ச்சித் தொகுப்பு, சுவடியியல், யோகா, மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மீகம், தமிழ் இலக்கியங்களில் வைணவக் கூறுகள், வைணவ உரைகள், இலக்கிய நோக்கில் திவ்யபிரபந்தம், ஒப்பிலக்கியம் தேவாரம் திவ்யபிரபந்தம், ஸ்ரீராமானுஜர் |
| சான்றிதழ் | இசை, பரதநாட்டியம், நூலகம் மற்றும் தகவலறிவியல், தமிழ்ப் புலவர் பயிற்சி, அக்குபஞ்சர், கருவி இசை (மிருதங்கம், தவில்), சுவடியியல், வரைகலை மற்றும் வண்ணக்கலை, யோகா, மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மீகம், வைணவம், ஆழ்வார்கள் ஆச்சார்யர்கள் வாழ்வும் பணியும், வைணவ ஆலயங்களில் கல்வெட்டுக்கள், வேதங்கள் வேதாந்தங்கள் |
| முதுநிலைப் பட்டயம் | கணிப்பொறி பயன்பாட்டியல், வழிகாட்டல் மற்றும் அறிவுரை பகர்தல், இணைய சேவைகள், யோகா, வைணவம், ஸ்ரீபாஷ்யம் |
| அறிமுகநிலைப் படிப்பு (Introductory Course) | தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல். |

ஆ

## விண்ணப்பக் கட்டணம் (Cost of Application)

| | |
|---|---|
| **எம்.பி.ஏ.,** | ரூ.350/- |
| பிற பாடங்களுக்கு | ரூ.150/- |

அஞ்சல் வழியில் விண்ணப்பத்தினைப் பெற விரும்புவோர் எம்.பி.ஏ. பாடப்பிரிவிற்கு ரூ.400/- ஐயும், பிற பாடப்பிரிவுகளுக்கு ரூ.200/-ஐயும் கீழ்க்காணும் தமிழ்ப் பல்கலைக்கழக தொலைநிலைக்கல்வி இயக்கக இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள *ONLINE PAYMENT* என்ற இணைப்பு (*link*) வழியாக டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு மற்றும் நெட்பாங்கிங் மூலமாகவும் மேற்கண்ட விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தி மின்இரசீதினை (*E-Receipt*) அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**இயக்குநர்,**
**தொலைநிலைக்கல்வி இயக்ககம்,**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்,**
**தஞ்சாவூர் - 613 010**

நேரில் விண்ணப்பம் பெற விரும்புவோர் மேற்கண்ட விண்ணப்பத் தொகையினைத் தமிழ்ப் பல்கலைக்கழக, பாங்க் ஆப் இந்தியா வங்கிக் கிளையில் கணக்கு எண்: 814510110000054-ல் செலுத்தி, தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் வங்கி இரசீதினைக் காட்டி விண்ணப்பத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்களைத் தொலைநிலைக் கல்வி இயக்கக *www.tamiluniversitydde.in* என்ற இணைய தள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

அவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய கட்டணத்தை ONLINE PAYMENT வழியாக செலுத்தி மின் இரசீதினை எடுத்து இணைத்து அனுப்புதல் வேண்டும்.

செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணங்கள் திரும்பத் தரப்படமாட்டாது.

## மாணவர்களின் கவனத்திற்கு

- **மாணவர்கள் தங்கள் கல்விக் கட்டணங்களை நேரடியாகவோ/** *ONLINE PAYMENT* **வழியாகவோ செலுத்தலாம்.**

  **நேரடியாக செலுத்துவோர் தமிழ்ப் பல்கலைக்கழக பாங்க் ஆப் இந்தியா வங்கிக் கிளையில் செலுத்தி. இரசீதினை இயக்ககத்தில் பதிவு செய்தல் வேண்டும்.**

  *ONLINE PAYMENT* **வழியாக செலுத்துவோர் தொலைநிலைக்கல்வி இயக்கக இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள** *ONLINE PAYMENT* **என்ற இணைப்பு வழியாக செலுத்தி மின் இரசீதினை (***E-Receipt***) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.**

- **மாணவர்கள் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தின் கற்றல் உதவி மையத்தின்வழி சேர்க்கை பெறும் போது, முழுக் கல்விக் கட்டணத் தொகையைப் பல்கலைக் கழகத்திற்கு இணையதளவழி** *ONLINE PAYMENT* **மூலம் செலுத்தி மின் இரசீதினை அளித்தல் வேண்டும்.**

- **அஞ்சல்வழி அல்லது பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தில் நேரடிச் சேர்க்கை பெறுவோர் முழு கல்விக் கட்டணத்தையும் இணையதளவழி** *(ONLINE PAYMENT)* **செலுத்தி மின் இரசீதினை அளித்தல் வேண்டும்.**

- **பிற அனைத்துக் கட்டணங்களையும் இணையதளவழி** *(ONLINE PAYMENT)***யாகவே செலுத்தி, மின் இரசீதினை இணைத்து அனுப்ப வேண்டும்.**

## பாடப்பிரிவுகளும் கல்வித் தகுதிகளும்

### முதுநிலைப் பட்டம்

| எண் | பாடம் / பாடக்குறியீட்டு எண் | சேர்க்கைத் தகுதி | காலம் |
|---|---|---|---|
| 1. | எம்.ஏ., (தமிழ்) -201 | தமிழை ஒரு பாடப்பிரிவாகக் கொண்ட 3ஆண்டுகால இளநிலைப் பட்டப்படிப்பில் தேர்ச்சி **(அல்லது)** நாடகவியல், தொல்பொருள் ஆய்வு ஆகிய தாள்களுடன் மூன்றாண்டு புலவர் பட்டயப் படிப்பில் தேர்ச்சி **(அல்லது)** அதற்கு இணையானது. | ஈராண்டுகள் |
| 2. | எம்.ஏ., (வரலாறு) -202 | குறைந்த பட்சம் ஏதேனும் ஒரு 3 ஆண்டு கால இளநிலைப் பட்டப் படிப்பில் தேர்ச்சி | |
| 3. | எம்.ஏ., (தமிழிசை) -204 | இசையில் 3 ஆண்டுகால இளநிலைப்பட்டத் தேர்ச்சி **அல்லது** ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டத்துடன் இசை. பரதநாட்டியத்தில் அரசு அங்கீகரிக்கப்பட்ட இசை/பரதநாட்டிய பட்டயப் படிப்பிலோ (அல்லது) நுழைவுத் தேர்விலோ தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். | |
| 4. | எம்.ஏ., (பரதநாட்டியம்) - 213 | | |
| 5. | எம்.ஏ., (யோகா)-206 | குறைந்த பட்சம் ஏதேனும் ஓர் 3 ஆண்டு கால இளநிலைப் பட்டப் படிப்பில் தேர்ச்சி எம்.ஏ யோகா பாடப்பிரிவிற்கு கட்டாயப் பயிற்சி வகுப்பில் (Compulsory Contact Class) கலந்து கொள்ள வேண்டும் | |
| 6. | எம்.ஏ., (ஆங்கிலம்)-207 | | |
| 7. | எம்.எஸ்சி., (புவியியல்)-205 | | |
| 8. | எம்.எஸ்.சி.,(சுற்றுச்சூழல் அறிவியல்) (Environmental Science)-208 | | |
| 9. | எம்.எஸ்சி., (கணிதம்)-211 | இளநிலை கணிதம் பட்டப் படிப்பில் தேர்ச்சி | |
| 10. | எம்.எஸ்சி., (தாவரவியல்)-214 | இளநிலை தாவரவியல் பட்டப் படிப்பில் தேர்ச்சி | |
| 11. | எம்.எஸ்சி., (உளவியல்)-212 | குறைந்த பட்சம் ஏதேனும் ஒரு 3 ஆண்டு கால இளநிலைப் பட்டப் படிப்பில் தேர்ச்சி | |
| 12. | முதுநிலை சமூகப் பணி-210 (MSW-Master of Social Work) | | |
| 13. | எம்.காம்.,(வணிகவியல்) -203 | இளநிலை வணிகவியல் பட்டத் தேர்ச்சி B.Com/BBA/B.A(Corporate Secretaryship)/ BBM/BCSC/B.Sc(Maths)Accounts, Costing & Banking as alied / Ancillary subjects | |
| 14. | எம்.பி.ஏ., -310 | குறைந்த பட்சம் ஏதேனும் ஒரு 3 ஆண்டு கால இளநிலைப் பட்டப் படிப்பில் தேர்ச்சி | |
| 15. | எம். எல்.ஐ.எஸ். (நூலகம் மற்றும் தகவலறிவியல்) (M.L.I.S.)-209 | இளநிலை நூலகம் மற்றும் தகவலறிவியல் (பி.எல்.ஐ.எஸ்.) பட்டத் தேர்ச்சி | ஓராண்டு |

### முதுகலைப் பட்டயம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பி.ஜி.டி.சி.ஏ-380 | குறைந்த பட்சம் ஏதேனும் ஒரு 3 ஆண்டுகால இளநிலைப் பட்டப் படிப்பில் தேர்ச்சி | ஓராண்டு |
| 2. | பி.ஜி.டி.ஜி.சி- 381 | | |
| 3. | பி.ஜி.டி.டபிள்யூ.எஸ்.-382 | | |
| 4. | பி.ஜி.டி. ஒய் (யோகா) - 383 | | |

| எண் | பாடம்/ பாடக்குறியீட்டு எண் | சேர்க்கைத் தகுதி | காலம் |
|---|---|---|---|
| 5 | வைணவம் (PGDV)☐ | குறைந்த பட்சம் ஏதேனும் ஒரு 3 ஆண்டுகால | |
| 6 | ஸ்ரீபாஷ்யம் (PGDSB)☐ | இளநிலைப் பட்டப் படிப்பில் தேர்ச்சி | ஓராண்டு |
| | **பட்டயம்** | | |
| 1. | இசை ஆசிரியர் பயிற்சி➢ (Music Teacher Training)- 401 | மேல்நிலைப்பள்ளி (+2) தேர்ச்சியுடன் இசையில் சான்றிதழ்த் தேர்ச்சி/ தமிழக அரசு இசைப்பள்ளிச் சான்றிதழ் | |
| 2. | யோகா ஆசிரியர் பயிற்சி (Yoga Teacher Training)-402 | +2 தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது | |
| 3. | பரதநாட்டிய ஆசிரியர் பயிற்சி➢-403 (Bharathanatya Teacher Training)❖ | மேல்நிலைப்பள்ளி (+2) தேர்ச்சியுடன் பரதநாட்டியத்தில் சான்றிதழ்த் தேர்ச்சி | |
| 4. | பரதநாட்டியம்➢- 404 | 10ஆம் வகுப்புத் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது | |
| 5. | மூலிகை அறிவியல்*-405 | | |
| 6. | மருத்துவ மூலிகை அழகுக்கலை-406 | | |
| 7. | சோதிடவியல் -408 | +2 தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது **(அல்லது)** 10ஆம் வகுப்புத் தேர்ச்சி மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் தேர்ச்சி | |
| 8. | யோகா - 442 | | |
| 9. | கோயில் அர்ச்சகர் பயிற்சி -409 | 8ஆம் வகுப்புத் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது | |
| 10. | பேச்சுக்கலை - 414 | 10ஆம் வகுப்புத் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது | |
| 11. | கருவி இசை (வீணை,வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம்) ➢-415 | | |
| 12. | கருவிஇசை(மிருதங்கம்,தவில்)➢-416 | | |
| 13. | இசை (குரலிசை) ➢-417 | | ஓராண்டு |
| 14. | மரபுவழித் தமிழ் மருத்துவம் (Diploma in Traditional Tamil Medicine)-418 | | |
| 15. | அக்குபங்சர் (Acupuncture)○-419 | +2 தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது | |
| 16. | கல்வெட்டியல் -423 | | |
| 17. | கோயிற் கட்டடக்கலை -425 | | |
| 18. | சுவடியியல் - 426 | | |
| 19. | வரைகலை மற்றும் வண்ணக்கலைⓘ- 437 | | |
| 20. | மேடை நிகழ்ச்சித் தொகுப்பு➢-440 | | |
| 21. | மதிப்புணர்வுக்கல்வி மற்றும் ஆன்மீகம் ☆- 443 | | |
| 22. | நட்டுவாங்கம் ➢- 441 | +2 தேர்ச்சி அல்லது 10+3 ஆண்டு நாட்டியத்தில் பட்டயச் சான்றிதழ் கூடுதல் தகுதியாக நடனத்தில் 5 வருடகுருகுல பயிற்சி அல்லது நடனத்தில் சான்றிதழ் அல்லது பட்டயம் தேர்ச்சி(கட்டாயம் இருத்தல் வேண்டும்) அல்லது தொலைக் - காட்சியில் A Grade கலைஞராக இருத்தல் வேண்டும். | |

| எண் | பாடம்/ பாடக்குறியீட்டு எண் | சேர்க்கைத் தகுதி | காலம் |
|---|---|---|---|
| 23. | தமிழ் இலக்கியங்களில் வைணவக் கூறுகள் □- 444 | 10ஆம் வகுப்புத் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது | |
| 24. | வைணவ உரைகள் □- 445 | | |
| 25. | இலக்கியநோக்கில்திவ்யபிரபந்தம் □-446 | | |
| 26. | ஒப்பிலக்கியம், தேவாரம், திவ்யபிரபந்தம் □ - 447 | | |
| 27 | ஸ்ரீராமானுஜர் □ - 448 | | |
| **சான்றிதழ் படிப்பு** | | | |
| 1. | தமிழ்ப் புலவர் பயிற்சி-360 (Tamil Pandit Training) | தமிழ் இலக்கியத்தில் புலவர் பட்டம் **(அல்லது)** பி.லிட் பட்டம் பெற்றிருக்க வேண்டும் **(அல்லது)** நாடகவியல், தொல்பொருள் ஆய்வு ஆகிய தாள்களுடன் மூன்றாண்டு புலவர் பட்டயப் படிப்புத் தேர்ச்சி. (இப்பாடப்பிரிவின் காலத்தில் 10 நாள்கள் கட்டாயத் தொடர்பு வகுப்பில் (compulsory contact class) பங்குபெறுதல் வேண்டும். | 6 மாதங்கள் |
| 2. | இசை ➢ - 501 | 10ஆம் வகுப்புத் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது | |
| 3. | பரதநாட்டியம் ➢ 502 | | |
| 4. | நூலகம் மற்றும் - 503 தகவலறிவியல் | | |
| 5. | மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மீகம் ☆- 518 | | |
| 6. | கருவி இசை (மிருதங்கம், தவில்) ➢-504 | | |
| 7. | அக்குபங்சர் ❍(Acupuncture)-506 | 10ஆம் வகுப்புத் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது | ஓராண்டு |
| 8. | சுவடியியல்-511 | 10ஆம் வகுப்புத் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது | 6 மாதங்கள் |
| 9. | வரைகலை மற்றும் வண்ணக்கலை ⓘ- 515 | 8ஆம் வகுப்புத் தேர்ச்சி | |
| 10. | யோகா -517 | எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் | |
| 11. | வைணவம் □ - 519 | 8ஆம் வகுப்புத் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது | |
| 12. | ஆழ்வார்கள் ஆச்சார்யர்கள் வாழ்வும் பணியும் □- 520 | | |
| 13. | வைணவ ஆலயங்களில் கல்வெட்டுகள் □-521 | | |
| 14. | வேதங்கள் வேதாந்தங்கள் □- 522 | | |
| **அடிப்படைக் கல்வி** | | | |
| 1. | அறிமுகநிலைப் படிப்பு-604 ( Introductory Course) | தமிழில் எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் 13 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும் | ஓராண்டு |

## Online Certificate Courses

| | | | |
|---|---|---|---|
| 1. | Employment Linked Skilling Program | 12th (OR) Its Equivalent | 3 Months |
| 2. | Certificate course in GST | | |

◆ இப்பாடப் பிரிவினருக்குக் கட்டாயப் பயிற்சி வகுப்புகள் உண்டு.

❍ அக்குபங்சர் – டேனியல் கல்வி சமூக அறக்கட்டளை, தஞ்சாவூர் மற்றும் கம்பம் அகாடமி ஆஃப் அக்குபங்சர், கம்பம் நிறுவனத்துடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் நடத்தப்படுவது.

➢ திருச்சி மறைமாவட்டக் கல்விச் சங்கம், சென்னை தமிழிசைக் கல்லூரி நிறுவனங்களுடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் நடத்தப்படுவது.

◷ திருச்சி களஞ்சியம் அறக்கட்டளை நிறுவனத்துடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் நடத்தப்படுவது.

☆ Rajyoga Education & Research Foundation(Education wing) நிறுவனத்துடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் நடத்தப்படுவது.

☐ ஸ்ரீரங்கம் ஆழ்வார்கள் ஆச்சார்யர்கள் வைணவ ஆய்வு மைய நிறுவனத்துடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் நடத்தப்படுவது

## முதுநிலைத் தமிழ் (எம்.ஏ., )

| முதலாமாண்டு | |
|---|---|
| தாள் -1 | தமிழிலக்கிய வரலாறு |
| தாள்-2 | தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் |
| தாள்-3 | இக்கால இலக்கியம் |
| தாள்-4 | சிற்றிலக்கியம் |
| தாள்-5 | சமய இலக்கியம் |

| இரண்டாமாண்டு | |
|---|---|
| தாள் -6 | தொல்காப்பியம்-சொல்லதிகாரம் |
| தாள்-7 | தொல்காப்பியம்-பொருளதிகாரம் |
| தாள்-8 | காப்பிய இலக்கியம் |
| தாள்-9 | சங்க இலக்கியம் |
| தாள்-10 | இலக்கியத் திறனாய்வும் ஒப்பிலக்கியமும் |

## முதுநிலை வரலாறு (எம்.ஏ.,)

| முதலாமாண்டு | |
|---|---|
| தாள் -1 | இந்திய வரலாறு (கி.பி.1206 வரை) |
| தாள்-2 | இந்திய வரலாறு (கி.பி.1206-1707) |
| தாள்-3 | இந்திய வரலாறு (கி.பி.1707-1947) |
| தாள்-4 | தமிழக வரலாறு (சங்ககாலம்-கி.பி.1565 வரை) |
| தாள்-5 | தமிழக வரலாறு (கி.பி.1565-1947 வரை) |

| இரண்டாமாண்டு | |
|---|---|
| தாள் -6 | சீன ஜப்பான் வரலாறு (கி.பி.1800-1975) |
| தாள்-7 | அமெரிக்கா வரலாறு (கி.பி.1776-1945) |
| தாள்-8 | ஐரோப்பிய வரலாறு (கி.பி.1453-1789) |
| தாள்-9 | ஐரோப்பிய வரலாறு (கி.பி.1789-1945) |
| தாள்-10 | பன்னாட்டு உறவுகள் (கி.பி.1945 முதல்) |

## முதுநிலைத் தமிழிசை (எம்.ஏ., )

| முதலாமாண்டு | |
|---|---|
| தாள் -1 | செய்முறை-1 கல்பிதம்-1 |
| தாள்-2 | செய்முறை-2 மனோதர்மம் |
| தாள்-3 | இசையியல்-1 |
| தாள்-4 | இசை வரலாறு |
| தாள்-5 | இசை நாடகம் (இராம நாடகக் கீர்த்தனை) |

| இரண்டாமாண்டு | |
|---|---|
| தாள் -6 | செய்முறை-3 கல்பிதம்-2 |
| தாள்-7 | செய்முறை-4 செவ்விசை அரங்கு நிகழ்த்துதல் |
| தாள்-8 | இசையியல்-2 |
| தாள்-9 | இசை வரலாறு-2 |
| தாள்-10 | ஆய்வேடு |

## முதுநிலை ஆங்கிலம்(எம்.ஏ.,)

| முதலாமாண்டு | |
|---|---|
| தாள் -1 | British Literature-I |
| தாள்-2 | American Literature |
| தாள்-3 | Language and Linguistics |
| தாள்-4 | Indian Writing in English |
| தாள்-5 | Women Studies |

| இரண்டாமாண்டு | |
|---|---|
| தாள்-6 | Shakespeare |
| தாள்-7 | British Literature - II |
| தாள்-8 | Literary Criticism |
| தாள்-9 | New Literature |
| தாள்-10 | Classics-World Literature in Translation (Eastern & Western) |

### நேரடிச் சேர்க்கை

**தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் மாணவர்கள் (நாள்காட்டி ஆண்டு - ஜனவரி 1 முதல் பிப்ரவரி 28 வரை)/கல்வியாண்டு - ஜுலை 1 முதல் ஆகஸ்டு 31 வரை) சேர்க்கை பெறலாம். பல்கலைக்கழக வேலை நாள்களில் காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (உணவு இடைவேளை நீங்கலாக) உரிய கட்டணத்தை வங்கியில் செலுத்தி விண்ணப்பத்துடன் விவரக் கையேட்டினைப் பெற்றுக் கொள்ளலாம்.**

## முதுநிலை சமூகப் பணி
## (M.S.W - Master of Social Work)

**முதலாமாண்டு**

| | |
|---|---|
| தாள் -1 | சமூகப்பணி மற்றும் இந்திய சமூகக் கட்டமைப்பு அறிமுகம்<br>Introduction to Social Work and Indian Social Structure |
| தாள்-2 | சமூக செயல்பாட்டு பணி மற்றும் குழுப்பணி<br>Social Case Work and Group Work |
| தாள்-3 | சமூக அமைப்பு மற்றும் நடவடிக்கைகள்<br>Community Organisation and Social Action |
| தாள்-4 | சமூக நல நிர்வாகம், சட்டம் மற்றும் கொள்கைகள்<br>Social Welfare Administration, Social Legislations and Social Policy |
| தாள்-5 | சமூகப்பணி ஆய்வு மற்றும் புள்ளியியல்<br>Social Work Research and Statistics |
| தாள்-6 | களப்பணி - செயல்முறை<br>Field Work Practical and Viva-Voce |

**இரண்டாமாண்டு**

| | |
|---|---|
| தாள்-7 | கிராம மற்றும் நகர்ப்புற சமூக முன்னேற்றம்<br>Rural and Urban Community Development |
| தாள்-8 | மருத்துவ உளவியல் சமூகப் பணிகள்<br>Medical Psychiatric Social Work |
| தாள்-9 | பணியாளர் மேலாண்மை, தொழில் தொடர்பு மற்றும் பணியாளர் நலன்<br>Personnel Management, Industrial Relations and Labour Welfare |
| தாள்-10 | குடும்பம் மற்றும் குழந்தை நலம்<br>Family and Child Welfare |
| தாள்-11 | ஆய்வேடு மற்றும் வாய்மொழித் தேர்வு<br>Project Work and Viva-Voce |

## முதுநிலை கணிதம்

**முதலாமாண்டு**

| | |
|---|---|
| தாள் -1 | நவீன இயற்கணிதம் |
| தாள்-2 | மெய் பகுப்பாய்வியல் |
| தாள்-3 | வகைக்கெழு சமன்பாடுகள் |
| தாள்-4 | கற்பனை பகுப்பாய்வியல் |
| தாள்-5 | எண்ணியல் பகுப்பாய்வியல் |

**இரண்டாமாண்டு**

| | |
|---|---|
| தாள் -6 | அமைப்புகள் மற்றும் சார்புகளின் பகுப்பாய்வியல் |
| தாள்-7 | வரைபடவியல் |
| தாள்-8 | கணித நிகழ்தகவு மற்றும் வாய்ப்பியல் செயல்பாடு |
| தாள்-9 | இயக்கவியல் |
| தாள்-10 | சி++ திட்ட நிரலாக்கம் |

## முதுநிலை நூலக மற்றும் தகவலறிவியல் (M.L.I.S.,)

| | |
|---|---|
| தாள் -1 | நூலகம் மற்றும் தகவல் மையங்கள் மேலாண்மை |
| தாள்-2 | நூலகங்களில் தகவல் தொழில்நுட்பம் |
| தாள்-3 | நூலகப் பகுப்பியல் மற்றும் பட்டியலாக்கம் செய்முறை |
| தாள்-4 | பொது நூலகம் அமைப்பும் சேவைகளும் |
| தாள்-5 | கல்வி நூலகங்கள் அமைப்பும் சேவைகளும் |
| தாள்-6 | தகவல் ஆதாரங்கள். அமைப்புகள். சேவைகள் |
| தாள்-7 | ஆய்வு நெறிமுறைகள் |
| தாள்-8 | நூல்கள் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் |

- வகுப்புகள் 4+4 = எட்டு நாட்கள்
  அக மதிப்பீடு 25 எழுத்துத் தேர்வு 75

## முதுநிலை சுற்றுச்சூழல் அறிவியல்
## (Environmental Science)

**முதலாமாண்டு**

| | |
|---|---|
| தாள் -1 | சுற்றுச்சூழல் அறிவியலின் அறிமுகம்<br>Introduction to Environmental Science |
| தாள்-2 | உயிரினப் பல்வகைமை மற்றும் இயற்கை வளங்கள்<br>Biodiversity and Natural resources |
| தாள்-3 | சுற்றுச்சூழல் மாசுபாடு<br>Environmental Pollution |
| தாள்-4 | ஆய்வு உபகரணங்களும் பகுப்பாய்வு முறைகளும்<br>Instrumentation & Methods of Analysis |
| தாள்-5 | செய்முறை-1 Practical I |

**இரண்டாமாண்டு**

| | |
|---|---|
| தாள்-6 | ஆற்றல் வள மேம்பாடு<br>Management of Energy Resources |
| தாள்-7 | சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் நீடித்து நிலைத்த வளர்ச்சி<br>Environmental Management and Sustainable Development |
| தாள்-8 | சுற்றுச்சூழல் பொறியியல்<br>Environmental Engineering |
| தாள்-9 | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு<br>Environmental Impact Assessment |
| தாள்-10 | செய்முறை-II Practical II |

## முதுநிலை வணிகவியல் (M.Com)

| முதலாமாண்டு | |
|---|---|
| தாள் 1 | வணிக மேலாண்மை |
| தாள் 2 | அங்காடியியல் மேலாண்மை |
| தாள் 3 | மேலாண்மைக் கணக்கியல் |
| தாள் 4 | நிறுமச்சட்டம் |
| தாள் 5 | தொழில் முனைவோர் வளர்ச்சி |
| **இரண்டாமாண்டு** | |
| தாள் 6 | மனித வள மேலாண்மை |
| தாள் 7 | நிதியியல் மேலாண்மை |
| தாள் 8 | மேல்நிலைக் கணக்கியல் |
| தாள் 9 | பன்னாட்டு வணிகம் |
| தாள் 10 | தகவல் தொழில்நுட்பம் |

## முதுநிலை தாவரவியல்

| முதலாமாண்டு | |
|---|---|
| தாள் -1 | பூஞ்சையியல், பாசியியல் மற்றும் ப்ரையோபைட் (நிலத்தாவரம்) |
| தாள்-2 | நுண்ணுயிரியல், தாவர நோய்க்குறியியல் மற்றும் உயிர் தொழில்நுட்பம் |
| தாள்-3 | டெரிடோபைட்(Pteridophyte) பூவாத்தாவரங்கள் Gymnosperms மற்றும் படிமத்தாவரவியல்(Palaeobotany) |
| தாள்-4 | பூக்கும் தாவர உள்ளமைப்பு, கருவியல் பயன்பாட்டுத் தாவர திசு வளர்ப்பு மற்றும் பயன்முறைத் தாவரவியல் (Applied Botany) |
| செய்முறைத் தேர்வு-1 | |
| செய்முறைத் தேர்வு -2 | |
| **இரண்டாமாண்டு** | |
| தாள் -5 | பூக்கும் தாவரங்களின் வகைப்பாட்டியல், பொருளாதாரப் பயன்கள், சுற்றுச்சூழல் உயிரியல், தாவரநில வரைவியல் (Phytogeography) மற்றும் வனவியல் |
| தாள்-6 | செல் உயிரியியல், மரபியல், தாவரப் பெருக்கம், உயிர் பரிணாமவியல் மற்றும் உயிர் அளவீடு(Biometry) |
| தாள்-7 | இனக்குழுத் தாவரவியல் (Ethnobotany) உயிரிய விரிமம்(Biodiversity) |
| தாள்-8 | தாவர உடற்செயலியியல் மற்றும் உயிர் வேதியியல் |
| செய்முறைத் தேர்வு - 3 | |
| செய்முறைத் தேர்வு - 4 | |

## முதுவணிக மேலாண்மையியல் (MBA - Master of Business Administration)

1. எம்.பி.ஏ., பொது
   (General)
2. எம்.பி.ஏ., நிதி மேலாண்மை
   (Financial Management)
3. எம்.பி.ஏ., மனிதவள மேலாண்மை
   (Human Resource Management)
4. எம்.பி.ஏ., சந்தை மேலாண்மை
   (Marketing Management)
5. எம்.பி.ஏ., அமைப்பு மேலாண்மை
   (System Management)
6. எம்.பி.ஏ., வேளாண் வணிக மேலாண்மை
   (Agri.Business Management)
7. எம்.பி.ஏ., ஊடக மேலாண்மை
   (Media Management)
8. எம்.பி.ஏ., சுகாதார மேலாண்மை
   (Health Management)
9. எம்.பி.ஏ., நிலவுடைமை மேலாண்மையியல்
   (Real Estate Management)

**காலம்** : 2 ஆண்டுகள் (பருவமுறை)
**கல்வித்தகுதி:** ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டம்

* அனைத்துத் தாள்களுக்கும் அக மதிப்பெண் 25 + தேர்வு மதிப்பெண் 75; மொத்தம் 100 மதிப்பெண்கள்.
  அக மதிப்பெண்கள்:
  ஒப்படைப்பு (assignment) -2 : 15 மதிப்பெண்
  (ஒவ்வொன்றிற்கும் 7 1/2 மதிப்பெண்)
  தேர்வு (exam) -1 : 10 மதிப்பெண்
  கூடுதல் : 25 மதிப்பெண்

* **எம்.பி.ஏ., -பொது:** இப்பிரிவினைத் தேர்வு செய்யும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விருப்பப் பாடங்களிலிருந்தும் (electives) ஏதேனும் மூன்று விருப்பப்பாடத் தாள்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

* **எம்.பி.ஏ-நிதி மேலாண்மை, மனிதவள மேலாண்மை, சந்தை மேலாண்மை, அமைப்பு மேலாண்மை, வேளாண் வணிக மேலாண்மை, ஊடக மேலாண்மை மற்றும் சுகாதார மேலாண்மை, நிலவுடைமை மேலாண்மை** ஆகியவற்றில் ஏதேனும் ஒரு சிறப்புப் பிரிவினைத் தேர்வு செய்யும் மாணவர்கள் தொடர்புடைய விருப்பப் பாடங்களில் (electives) கொடுக்கப்பட்டுள்ள தாள்களில் மட்டும் ஏதேனும் மூன்று விருப்பப்பாடத் தாள்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

* விருப்பப்பாடம்-4 இல் மாணவர்கள் ஆய்வேடு அல்லது தொடர்புடைய பாடப்பிரிவில் ஒரு விருப்பப்பாடத் தாளினைத் தெரிவு செய்ய வேண்டும்.

**முதற் பருவம்**

தாள்-1 மேலாண்மைக் கோட்பாடுகள் (Principles of Management)
தாள்-2 அமைப்புசார் நடத்தையியல் (Behavioural Sciences)
தாள்-3 மேலாண்மைப் பொருளியல் I (Economics for Manager I)
தாள்-4 மேலாண்மை அறிவியல் (Management Science)
தாள்-5 வணிகக் கடிதத் தொடர்பு (Business Communication)

**இரண்டாம் பருவம்**

தாள்-6 நிதி மற்றும் மேலாண்மைக் கணக்கியல் (Financial and Management Accounting)
தாள்-7 ஆய்வியல் அணுகுமுறைகள் (Research Methodology)
தாள்-8 வணிகச் சட்டம் (Business Law)
தாள்-9 நிறுவனத் தகவல் முறைகள் (Enterprisewide Information Systems)
தாள்-10 மேலாண்மைப் பொருளியல் II (Economics for Managers II)

**மூன்றாம் பருவம்**

தாள்-1 நிதி மேலாண்மை (Financial Management)
தாள்-2 செயல்முறை மேலாண்மை (Operations Management)
தாள்-3 மனித வள மேலாண்மை (Human Resource Management)
தாள்-4 சந்தை மேலாண்மை (Marketing Management)
தாள்-5 அமைப்புப் பகுப்பாய்வு மற்றும் திட்டம் (System Analysis & Design)

**நான்காம் பருவம்**

தாள்-1 யுக்தி மேலாண்மை (Strategic Management)
தாள்-2 விருப்பப் பாடம் -1 (Elective I)
தாள்-3 விருப்பப் பாடம் -2 (Elective II)
தாள்-4 விருப்பப் பாடம் -3 (Elective III)
தாள்-5 விருப்பப் பாடம் -4 (Elective IV)
அல்லது
திட்டக்கட்டுரை (Project)

**விருப்பப்பாடம்**

1. சந்தை மேலாண்மை (Marketing Management)
2. நிதி மேலாண்மை (Financial Management)
3. அமைப்புசார் மேலாண்மை (System Management)
4. மனித வள மேலாண்மை (Human Resource Management)
5. வேளாண்-வணிக மேலாண்மை (Agri Business Management)
6. ஊடக மேலாண்மை (Media Management)
7. சுகாதார மேலாண்மை (Health Management)
8. நில மேலாண்மை (Land Management)

**I. சந்தை மேலாண்மை (MARKETING MANAGEMENT)**

1. சந்தை மேலாண்மை (Marketing Research)
2. நுகர்வோர் நடத்தையியல் (Consumer behaviour)
3. விளம்பரம் மற்றும் விற்பனை மேலாண்மை (Advertising & Sales Management)
4. உற்பத்தி மேலாண்மை (Production Management)
5. சில்லறை விற்பனை மேலாண்மை (Retail Management)
6. ஊரகச் சந்தையியல் (Rural Marketing)
7. வணிகக்குறியீடு மேலாண்மை (Brand Management)
8. விற்பனை மற்றும் வழங்கல் மேலாண்மை (Distribution Management)

**II. நிதி மேலாண்மை (FINANCIAL MANAGEMENT)**

1. முதலீடு மற்றும் செயல்பாட்டு மேலாண்மை (Investment & Portfolio Management)
2. நிறுவன நிதியியல் (Corporate Finance)
3. நிதி நிறுவனங்கள் மற்றும் செயல்பாடுகள் (Financial Institutions & Services)
4. முதலீட்டு வங்கியியல் (Investment Banking)
5. தீர்வு மேலாண்மை (Derivative Management)
6. திட்ட மதிப்பிடல் (Project appraisal)

**III. அமைப்புசார் மேலாண்மை**
**(SYSTEM MANAGEMENT)**

1. அறிவுசார் மேலாண்மை
(Knowledge Management)
2. முடிவுகள் ஆதரவு மேலாண்மை
(Decision Support Management)
3. மின்-வணிக மற்றும் எண் வணிகமேலாண்மை
(e-Business & Digital Economy)
4. மாதிரிகள் மற்றும் புகுத்துதல்
(Modelling & Simulation)
5. மென்பொருள் திட்ட மேலாண்மை
(Software Project Management)
6. இணையதளத் தொழில்நுட்பம் & கட்டமைப்பியல்
(Internet Technologies & Systems)

**IV. மனித வள மேலாண்மை**
**(HUMAN RESOURCE MANAGEMENT)**

1. பணியாளர் பயிற்சி & மேம்பாடு
(Training & Development)
2. பணித்திறன் மதிப்பிடல்
(Performance Appraisal)
3. அமைப்பு மேம்பாடு
(Organisational Development)
4. வழிகாட்டல் & ஆலோசனை
(Guidance and Counselling)
5. பணியாளர் நலச் சட்டங்கள்
(Labour Legislation)
6. இழப்பீட்டு மேலாண்மை
(Compensation Management)
7. தொழில்முனைவோர் மேம்பாடு
(Entrepreneurship Development)

**V. வேளாண்-வணிக மேலாண்மை**
**(AGRI. BUSINESS MANAGEMENT)**

1. இயற்கை வள மேலாண்மை
(Natural Resource Management)
2. வேளாண் வணிகத் திட்ட மேலாண்மை
(Agri.Business Project Management)
3. வேளாண் இடர் மேலாண்மை
(Agricultural Risk Management)
4. பன்னாட்டு வேளாண் பொருள் வணிகம்
(International Trade in Agricultural Products)
5. வேளாண் இடுபொருள் சந்தையியல்
(Agricultural Input Marketing)
6. உணவுப் பொருள் சில்லறை விற்பனை மேலாண்மை
(Food Retailing)

**VI. சுகாதார மேலாண்மை**
**(HEALTH MANAGEMENT)**

1. மருத்துவமனை வடிவமைப்பு மற்றும் திட்டமிடுதல்
(Hospital Architecture Planning & Design)
2. மருத்துவமனை செயற்பாடு – மருத்துவமில்லா சேவைகள் (Hospital Operation-(Supportive Services))
3. மருத்துவமனை செயற்பாடு – பிணியாளி சேவைகள்
(Hospital Operation-(Patient Care))
4. சுகாதாரச் சட்டங்களும் கொள்கைகளும்
(Health Laws and Policies)

**VII. ஊடக மேலாண்மை**
**(MEDIA MANAGEMENT)**

1. ஊடகத் தொடர்பு
(Communication Media)
2. ஊடக ஒழுக்கவியல்
(Media Ethics)
3. ஊடக நிகழ்வு மேலாண்மை
(Event Management in Media)
4. ஊடகத்தில் ஒலி, காட்சி தயாரித்தல்
(Audio & Visual Production in Media)

**VIII. நிலவுடைமை மேலாண்மை**
**(REAL ESTATE MANAGEMENT)**

1. நில உடைமை மேலாண்மை மற்றும் சந்தைப் பொருளியல்
(Real Estate Management and Market Economics)
2. நிலவுடைமை மேலாண்மையின் சட்ட சிக்கல்களும் தொழிற்முறைப் பயிற்சிகளும்
(Legal Issues and Professional Practice in Real Estate Management)
3. நிலவுடைமை வளர்ச்சி நிதி மற்றும் முதலீடு
(Real Estate Development Finance and Investments)
4. நிலவுடைமை திட்டம் வரையறுத்தல்
(Real Estate Project Formulation and Appraisal)

## முதுநிலை புவியியல் (எம்.எஸ்சி.,)

முதலாமாண்டு

| | |
|---|---|
| தாள் -1 | புவி அமைப்பியல் |
| தாள்-2 | மக்கட்தொகைப் புவியியல் |
| தாள்-3 | உலகப் புவியியல் |
| தாள்-4 | செய்முறை-1 |
| தாள்-5 | செய்முறை-2 |
| | இரண்டாமாண்டு |
| தாள் -6 | தொழில் மற்றும் நகரப் புவியியல் |
| தாள்-7 | தொலையுணர்வுப் புவியியல் & புவியியல் தகவல் தொகுப்பு |
| தாள்-8 | பேரிடர் மேலாண்மை |
| தாள்-9 | செய்முறை-3 (தாள்-8 தொடர்பாக) |
| தாள்-10 | ஆய்வேடு |

## முதுநிலை பரதநாட்டியம்(எம்.ஏ.,)

| முதலாமாண்டு | |
|---|---|
| தாள் -1 | பரதநாட்டிய வரலாறு (History of Dance) |
| தாள்-2 | Theory of Bharathanatyam |
| தாள்-3 | பரதநாட்டியம் செய்முறை-1 |
| தாள்-4 | பரதநாட்டியம் செய்முறை-2 |
| தாள்-5 | பரதநாட்டியம் செய்முறை-3 |

| இரண்டாமாண்டு | |
|---|---|
| தாள் -6 | Tamil Heritage of Dance (Written) |
| தாள்-7 | Traditional Theatres of India (Written) |
| தாள்-8 | பரதநாட்டியம் செய்முறை-4 |
| தாள்-9 | பரதநாட்டியம் செய்முறை-5 (Dance Drama) |
| தாள்-10 | பரதநாட்டியம் செய்முறை-6 (Performance & Nattuvangam) |
| தாள்-11 | ஆய்வேடு |

## முதுநிலை யோகா
## (Master of Arts in Yoga)

முதலாமாண்டு

| | |
|---|---|
| தாள் -1 | யோகா - ஓர் அறிமுகம் |
| தாள்-2 | இந்தியத் தத்துவம் |
| தாள்-3 | யோகா - உடற்கூறியலும் செயலியலும் |
| தாள்-4 | யோகாவும் சித்தர் மரபுகளும் |
| தாள்-5 | செய்முறைப் பயிற்சி - 1 |

இரண்டாமாண்டு

| | |
|---|---|
| தாள் -6 | யோக ஆய்வு முறைகள் |
| தாள்-7 | யோக உளவியல் |
| தாள்-8 | தற்கால யோக முறைகள் |
| தாள்-9 | திட்டக்கட்டுரை |
| தாள்-10 | செய்முறைப் பயிற்சி - 2 |

## முதுநிலை உளவியல்(எம்.எஸ்சி.,)

முதலாமாண்டு

| | |
|---|---|
| தாள் -1 | முற்போக்குப் பொது உளவியல் |
| தாள்-2 | முற்போக்குச் சமூக உளவியல் |
| தாள்-3 | வளர்ச்சிசார் உளவியல் |
| தாள்-4 | ஆய்வு நெறிமுறைகள் மற்றும் புள்ளியியல் |
| தாள்-5 | செய்முறை-1 |

இரண்டாமாண்டு

| | |
|---|---|
| தாள் -6 | ஆளுமையும் அதன் கோட்பாடுகளும் |
| தாள்-7 | அறிவுரை பகர்தலும் அதன் கோட்பாடுகளும் |
| தாள்-8 | அறிவுசார் நரம்பு உளவியல் |
| தாள்-9 | நோயறி உளவியல் |
| தாள்-10 | செய்முறை-2 |

## முதுநிலைப் பட்டயப் படிப்பு
(Post Graduate Diploma)

### பி.ஜி.டி.சி.ஏ (கணிப்பொறிப் பயன்பாட்டியலில் முதுநிலைப் பட்டயம்)

### PGDCA -Post Graduate Diploma in Computer Applications

| முதல் பருவம் | |
|---|---|
| தாள்-1 | தகவல்தொழில்நுட்ப அறிமுகம் (Introduction to Information Technology) |
| தாள்-2 | கணிப்பொறி எண்ணிலக்கக் கட்டமைப்பு (Digital Computer Organisation) |
| தாள்-3 | சி மற்றும் சி++ வழியமைப்பு (Programming in Cand C++) |
| தாள்-4 | தொடர்புடைய தரவுத்தள மேலாண்மை அமைப்பு (Relational Data Base Management Systems ) |
| தாள்-5 | செய்முறை-1 பிசி மென்பொருள் (Practical-I PC Software lab) |
| தாள்-6 | செய்முறை-2 சி மற்றும் சி++ வழியமைப்புச் செய்முறை (Practical-II Programming in C and C++ Lab) |

| இரண்டாம் பருவம் | |
|---|---|
| தாள்-7 | கணிப்பொறி வலையமைப்பு (Computer Networks) |
| தாள்-8 | ஜாவா வழியமைப்பு (Java Programming) |
| தாள்-9 | இணையதளமும் தள வடிவமைப்பும் (Internet and Web Designing) |
| தாள்-10 | மென்பொருள் பொறியியல் (Software Engineering) |
| தாள்-11 | செய்முறை-3 ஜாவா மற்றும் இணைய வடிவமைப்பு - செய்முறை (Practical-III JAVA & Web Designing-Lab) |
| தாள்-12 | செய்முறை-4 திட்டச் செய்முறை (Practical-IV Project work) |

### பி.ஜி.டி.ஒய் (யோகா - முதுநிலைப் பட்டயம்)

### PGDY - Post Graduate Diploma in Yoga

| | |
|---|---|
| தாள்-1 | யோகா - தோற்றமும் வளர்ச்சியும் |
| தாள்-2 | யோகாவும் உளவியலும் |
| தாள்-3 | யோகாவும் மதிப்பீட்டுக் கல்வியும் |
| தாள்-4 | செய்முறைப்பயிற்சி |

## பி.ஜி.டி.டபிள்யூ.எஸ் (இணைய சேவை- முதுநிலைப் பட்டயம்)

**PGDWS -Post Graduate Diploma in Web Services**

- தாள்-1 Web Designing
- தாள்-2 Web Services
- தாள்-3 Advanced Java Programming
- தாள்-4 Lab: Advanced Java Programming Lab
- தாள்-5 Project and Viva-Voce

## பி.ஜி.டி.ஜி.சி (வழிகாட்டல் மற்றும் அறிவுரை பகர்தல்- முதுநிலைப் பட்டயம்)

**PGDGC -Post Graduate Diploma in Guidance and Counselling**

- தாள்-1 பொது உளவியல் (General Psychology)
- தாள்-2 வழிகாட்டலும் அறிவுரைபகர்தலும் (Guidance and Counselling)
- தாள்-3 குடும்பம் மற்றும் இல்வாழ்க்கைக்கான அறிவுரைபகர்தல் (Family and Marital Counselling)
- தாள்-4 தொழில்சார் அறிவுரைபகர்தல் (Career Guidance)
- தாள்-5 செய்முறை (Practical)

## வைணவம் - முதுநிலைப் பட்டயம்

**Post Graduate Diploma in Vainavam**

- தாள்-1 வைணவத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி
- தாள்-2 வைணவ உரைவளம்
- தாள்-3 இராமானுசர் வாழ்வும் பணியும்
- தாள்-4 வைணவ ஆகமங்களும் கோயில் விழாக்களும்
- தாள்-5 திவ்யபிரபந்தத்தில் இசைக்கூறுகள்

## ஸ்ரீபாஷ்யம் - முதுநிலைப் பட்டயம்

**Post Graduate Diploma in Sribashyam**

- தாள்-1 யதீந்திர மத தீபிகை
- தாள்-2 ஸ்ரீபாஷ்யத்தின் உள்கட்டமைப்பு
- தாள்-3 ஸ்ரீபாஷ்யம் இரண்டாம் அத்தியாயமும், கீதாபாஷ்யமும்
- தாள்-4 திருவாய்மொழியும், ஸ்ரீபாஷ்யமும்
- தாள்-5 ஸ்ரீபாஷ்யமும் வாழ்வியல் நெறிகளும்

# பட்டயப் (Diploma) பாடப்பிரிவுகள்

### இசை ஆசிரியர் பயிற்சி

- தாள் -1 இசைக் கல்வியியல்
- தாள்-2 கல்வி உளவியலும் பள்ளி ஆட்சிமுறையும்
- தாள்-3 செயல்முறையும் இசைப் பயிற்சிக் கருவிகளும்
- தாள்-4 செய்முறை

### யோகா ஆசிரியர் பயிற்சி

- தாள் -1 யோகா - தோற்றமும் வளர்ச்சியும்
- தாள்-2 கல்வி உளவியலும் பள்ளி ஆட்சிமுறையும்
- தாள்-3 யோகாவும் மதிப்பீட்டுக் கல்வியும்
- தாள்-4 செய்முறைப் பயிற்சி மற்றும் கற்பித்தல்

### பரதநாட்டியம் ஆசிரியர் பயிற்சி

- தாள் -1 நாட்டியக் கல்வியியல்
- தாள்-2 கல்வி உளவியலும் பள்ளி ஆட்சிமுறையும்
- தாள்-3 நட்டுவாங்கம் -செய்முறை
- தாள்-4 நாட்டியம் பயிற்றுவித்தல்-செய்முறை

### பரதநாட்டியம்

- தாள் -1 செய்முறை-1
- தாள்-2 செய்முறை-2
- தாள்-3 பரதநாட்டிய இலக்கணம்
- தாள்-4 பரதநாட்டிய வரலாறு

### மூலிகை அறிவியல்

- தாள் -1 இந்திய மருத்துவ முறைகளும் வரலாறும்
- தாள்-2 தாவர அமைப்பு மற்றும் பகுப்பாய்வு
- தாள்-3 மருந்தறிவியல்
- தாள்-4 செய்முறைப் பயிற்சி

### மருத்துவ மூலிகை அழகுக் கலை

- தாள் -1 அழகுக் கலை அறிமுகம்
- தாள்-2 மூலிகை அழகுக் கலையும் அறிவியல் கூறுகளும்
- தாள்-3 செய்முறை-1
- தாள்-4 செய்முறை-2

### கோயில் அர்ச்சகர் பயிற்சி

| | |
|---|---|
| தாள் -1 | வழிபாட்டு முறைகள் |
| தாள்-2 | சடங்குகள் |
| தாள்-3 | செய்முறை-1 வாழ்வியல் நிகழ்வுகள் |
| தாள்-4 | செய்முறை-2 அருளியல் நிகழ்வுகள் |

### சோதிடவியல்

| | |
|---|---|
| தாள் -1 | சோதிட அடிப்படைகள் |
| தாள்-2 | சோதிடக் கூறுகள் |
| தாள்-3 | சோதிட பலன்கள் |
| தாள்-4 | வாய்மொழித் தேர்வு |

### யோகா

| | |
|---|---|
| தாள் -1 | தோற்றமும் வளர்ச்சியும் |
| தாள்-2 | யோகா – உடற்கூறும் செயலியலும் |
| தாள்-3 | யோகாப் பயிற்சி அடிப்படைக் கொள்கைகள் |
| தாள்-4 | யோகா – செய்முறைப் பயிற்சி |

### பேச்சுக்கலை

| | |
|---|---|
| தாள் -1 | பேச்சுக்கலை |
| தாள்-2 | பேச்சு வகைகள் |
| தாள்-3 | புகழ்பெற்ற பேச்சாளர்களும் பேச்சுக்களும் |
| தாள்-4 | செய்முறைப் பயிற்சி |

### கருவி இசை (வீணை, வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம்)

| | |
|---|---|
| தாள் -1 | செய்முறை-1 |
| தாள்-2 | செய்முறை-2 |
| தாள்-3 | இசையியல் எழுத்துத் தேர்வு |
| தாள்-4 | இசையியலும் வரலாறும் – எழுத்துத் தேர்வு |

### கருவி இசை (மிருதங்கம், தவில்)

| | |
|---|---|
| தாள் -1 | செய்முறை-1 |
| தாள்-2 | செய்முறை-2 |
| தாள்-3 | தாள இலக்கணம்-2 |
| தாள்-4 | தோற்கருவிகளின் வரலாறு |

### இசை

| | |
|---|---|
| தாள் -1 | செய்முறை-1 |
| தாள்-2 | செய்முறை-2 |
| தாள்-3 | இசையியல் எழுத்துத் தேர்வு |
| தாள்-4 | இசையியலும் வரலாறும் |

### கல்வெட்டியல்

| | |
|---|---|
| தாள் -1 | கல்வெட்டியல் – அறிமுகம் |
| தாள்-2 | கல்வெட்டியல் – தமிழகக் கல்வெட்டுகள் |
| தாள்-3 | எழுத்துப் பயிற்சி |
| தாள்-4 | ஆய்வறிக்கை அளித்தல் |

### மரபுவழி தமிழ் மருத்துவம்
(Diploma in Traditional Tamil Medicine)

| | |
|---|---|
| தாள் -1 | மரபுவழி தமிழ் மருத்துவம் – அறிமுகமும் அடிப்படைக் கல்வியும் |
| தாள்-2 | மரபுவழி தமிழ் மருந்துகளின் பயன்பாடும், அறிவியல் திறனும் |
| தாள்-3 | செய்முறைப் பயிற்சி - I |
| தாள்-4 | செய்முறைப் பயிற்சி -II |

### கோயிற் கட்டடக்கலை (Temple Architecture)

| | |
|---|---|
| தாள் -1 | கோயிற்கட்டடக்கலை – (தென்னிந்தியா) |
| தாள்-2 | கோயிற் கட்டடக்கலை – (வட இந்தியா) |
| தாள்-3 | நேரடிப் பயிற்சி |
| தாள்-4 | ஆய்வறிக்கை அளித்தல் |

### வரைகலை மற்றும் வண்ணக்கலை

| | |
|---|---|
| தாள்-1 | வரைகலையும், வண்ணக்கலையும் |
| தாள்-2 | வண்ணக்கலையின் அடிப்படைக் கூறுகளும் இயல்புகளும் |
| தாள்-3 | வரைகலை செய்முறை-1 |
| தாள்-4 | செய்முறை-2 |

### சுவடியியல்

| | |
|---|---|
| தாள்-1 | சுவடியியல் அறிமுகம் |
| தாள்-2 | சுவடிப் பாதுகாப்பு |
| தாள்-3 | சுவடிப் பதிப்பு முறைகள் |
| தாள்-4 | தமிழ்ச் சுவடி எழுத்துப் பயிற்சி– செய்முறை |

#### தொடு சிகிச்சை அறிவியல்

### Diploma in Acupuncture Science (D.A.Sc.)

| | |
|---|---|
| தாள்-1 | தொடுசிகிச்சை உடலறிவியல் |
| தாள் -2 | தொடுசிகிச்சை வரலாறும், தத்துவங்களும் |
| தாள்-3 | தொடுசிகிச்சை பயன்பாட்டியல் |
| தாள்-4 | செய்முறை - சக்தி நாளப் புள்ளிகளின் அமைவிடங்கள், நோயறிதல் மற்றும் சிகிச்சை |

#### மேடைநிகழ்ச்சித் தொகுப்பு

| | |
|---|---|
| தாள்-1 | Compering |
| தாள்-2 | Event Planning |
| தாள்-3 | செய்முறை-1 |
| | செய்முறை-2 |

#### நட்டுவாங்கம்

| | |
|---|---|
| தாள்-1 | நட் டுவாங்க இலக்கணம் |
| தாள்-2 | நட்டுவாங்க வழிமுறை |
| தாள்-3 | செய்முறை-1 |
| தாள்-4 | செய்முறை-2 |

#### மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மீகம்

| | |
|---|---|
| தாள்-1 | ஞானத்தின் மூலம் மாற்றம் |
| தாள்-2 | ஓர் ஆன்மீக வாழ்க்கை முறை |
| தாள்-3 | சுற்றுச்சூழலும் ஆன்மீகமும் |
| தாள்-4 | செய்முறை |

#### தமிழ் இலக்கியங்களில் வைணவக் கூறுகள்

| | |
|---|---|
| தாள்-1 | சங்க இலக்கியம் |
| தாள்-2 | சிலப்பதிகாரம் |
| தாள்-3 | கம்பராமாயணம் |
| தாள்-4 | திவ்யபிரபந்தத்தில் அக இலக்கிய கோட்பாடுகள் |

#### வைணவ உரைவளம்

| | |
|---|---|
| தாள்-1 | மணிப்ரவாளம் |
| தாள்-2 | ஈட்டு உரை |
| தாள்-3 | பெரியவாச்சான்பிள்ளையின் நாச்சியார் திருமொழி உரை (143 பாடல்கள்) |
| தாள்-4 | வேதாந்த தேசிகரின் முனிவாகன போகம் |

#### இலக்கிய நோக்கில் திவ்யபிரபந்தம்

| | |
|---|---|
| தாள்-1 | சொல்லாட்சி |
| தாள்-2 | இயற்கையைப் போற்றுதல் |
| தாள்-3 | சிற்றிலக்கியக் கூறுகள் |
| தாள்-4 | நாயக நாயகி பாவம் |

#### ஒப்பிலக்கியம்

| | |
|---|---|
| தாள்-1 | வேதம் தமிழ் செய்த மாறன் |
| தாள்-2 | திருக்கோவையாரும் திருவிருத்தமும் |
| தாள்-3 | சைவ, வைணவ வழிபாட்டு முறைகள், தேவாரம், திவ்யபிரபந்தம் ஒப்பாய்வு |
| தாள்-4 | திருக்குறளும், கீதையும் |

#### ஸ்ரீராமானுசர்

| | |
|---|---|
| தாள்-1 | இராமானுசர் வாழ்வும் பணியும் (பொது அறிமுகம்) |
| தாள்-2 | இராமானுசருடைய நூல்கள் |
| தாள்-3 | இராமானுசரின் சமுதாயச் சிந்தனைகளும், கோயில் நிர்வாகச் சீர்திருத்தங்களும் |
| தாள்-4 | இராமானுசரின் தமிழ்த் தொண்டு |

## சான்றிதழ் பாடப்பிரிவுகள்

#### தமிழ்ப் புலவர் பயிற்சி

| | |
|---|---|
| தாள்-1 | தமிழ் கற்பிக்கும் முறை |
| தாள்-2. | கல்வி உளவியலும் பள்ளி ஆட்சிமுறையும் |
| தாள் 3. | கல்வியில் தகவல்தொழில்நுட்பவியல் பயன்பாடு |
| | கற்பித்தல் பயிற்சி 1-8 பதிவேடு |

#### இசை

| | |
|---|---|
| தாள் -1 | செய்முறை-1 |
| தாள்-2 | செய்முறை-2 |
| தாள்-3 | அடிப்படை இசை இலக்கணம் |

#### பரதநாட்டியம்

| | |
|---|---|
| தாள் -1 | செய்முறை-1 |
| தாள்-2 | செய்முறை-2 |
| தாள்-3 | பரதநாட்டிய அடிப்படை இலக்கணம் |

### தொடு சிகிச்சை அறிவியல்
## Certificate in Acupuncture Science C.A.Sc.)

| | |
|---|---|
| தாள்-1 | தொடுசிகிச்சை உடலறிவியல் |
| தாள்-2. | தொடுசிகிச்சை தத்துவங்களும், பயன்பாடும் |
| தாள் 3. | செய்முறை - தொடுசிகிச்சை நோய்நாடலும், சிகிச்சை முறைகளும் |

### யோகா

| | |
|---|---|
| தாள்-1 | யோகா - ஓர் அறிமுகம் |
| தாள்-2 | யோகாவும் உடற்கூறியலும் |
| தாள்-3 | யோகா - செய்முறைப்பயிற்சி |

### கருவி இசை (மிருதங்கம், தவில்)

| | |
|---|---|
| தாள் -1 | செயல்முறை-1 |
| தாள்-2 | செயல்முறை-2 |
| தாள்-3 | தாள இலக்கணம் (எழுத்துத் தேர்வு) |

### சுவடியியல்

| | |
|---|---|
| தாள் -1 | சுவடியியல் |
| தாள்-2 | சுவடிப் பாதுகாப்பும் பதிப்பும் |
| தாள்-3 | சுவடி எழுத்துப் பயிற்சி - செய்முறை |

### வரைகலை மற்றும் வண்ணக்கலை

| | |
|---|---|
| தாள்-1 | வரைகலை மற்றும் வண்ணக்கலையின் அடிப்படைக்கூறுகளும் இயல்புகளும் |
| தாள்-2 | வரைகலை செய்முறை-1 |
| தாள்-3 | செய்முறை-2 |

### நூலகம் மற்றும் தகவலறிவியல்

| | |
|---|---|
| தாள்-1. | நூலகவியல் கோட்பாடுகள்-1 |
| தாள்-2. | நூலகவியல் கோட்பாடுகள்-2 |
| தாள்-3. | நூற்பகுப்பு மற்றும் நூற்பட்டித் தயாரிப்புச் செய்முறை |

### மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மீகம்

| | |
|---|---|
| தாள்-1. | தன்னையே ஆய்ந்தறிதல் |
| தாள்-2. | ஓர் ஆன்மீக வாழ்க்கை முறை |
| தாள்-3. | செய்முறை |

### வைணவம்

| | |
|---|---|
| தாள்-1. | வைணவத்தின் அடிநிலைகள் |
| தாள்-2. | நாலாயிர திவ்யபிரபந்தம் |
| தாள்-3. | திருவரங்கம் கோயில் வரலாறு |

### ஆழ்வார்கள். ஆச்சார்யர்கள் வாழ்வும் பணியும்

| | |
|---|---|
| தாள்-1. | ஆழ்வார்கள் வாழ்க்கை வரலாறு மற்றும் அவர்தம் நூல்கள் |
| தாள்-2. | நாதமுனிகள் தொடங்கி இராமானுசர் ஈறான ஆச்சார்யர்கள் வாழ்வும் பணியும் |
| தாள்-3. | இராமானுசருக்கு பிற்பட்ட ஆசார்யர்கள் - ஸ்ரீமணவாளமுனிகள் ஈறாக |

### வைணவ ஆலயங்களில் கல்வெட்டுகள்

| | |
|---|---|
| தாள்-1. | திருவரங்கம், திருமலை, காஞ்சி மற்றும் திருநாராயணபுரம் கோயில் கல்வெட்டுகள் |
| தாள்-2. | திருவரங்கம், திருமலை, காஞ்சி மற்றும் திருநாராயணபுரம் கோயில் செப்பேடுகள் |
| தாள்-3. | சுவடிகள் மற்றும் இதர ஆவணங்கள் |

### வேதங்கள், வேதாந்தங்கள்

| | |
|---|---|
| தாள்-1. | நான்கு வேதங்கள் |
| தாள்-2. | வேதாந்தங்கள் |
| தாள்-3. | துதி நூல்கள் |

### அறிமுக நிலைப் படிப்பு
### (Introductory Course)

| | |
|---|---|
| பகுதி-1 | தமிழ் பகுதி-1 மற்றும் பகுதி-2 கட்டாயப் பாடங்கள் (Compulsory Subjects) |
| பகுதி-2 | ஆங்கிலம் |
| பகுதி-3 | கணிதம், அறிவியல் , சமூக அறிவியல் |

❍ **தமிழ்ப் புலவர் பயிற்சி** சான்றிதழ் பாடப்பிரிவில் சேரும் மாணவர்கள் **தொடர்பு வகுப்புகள் நடைபெற்று முடிந்தவுடன் 10 நாள்கள் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளியில் கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.**

மாணவர்கள் தாங்கள் பயிற்சி மேற்கொள்ளவிருக்கும் பள்ளியின் முகவரியினை இணைக்கப்பட்டுள்ள படிவத்தை (இணைப்பு-பக்.76) பூர்த்தி செய்து இயக்ககத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். மாணவர்கள் தெரிவிக்கும் பள்ளியின் தலைமை ஆசிரியருக்கு இயக்ககத்தி லிருந்து கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள கடிதம் அனுப்பி வைக்கப்பெறும்.

❍ செய்முறை இடம்பெற்றுள்ள பாடப்பிரிவுகளில் கற்போர் அனைவருக்கும் தேர்வுக்கு முன்னர், செய்முறைப் பயிற்சி வகுப்புகள் அந்தந்த கற்றல் உதவி மையங்களில் நடத்தப்பெறும்.

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி வழியாக நேரடிச் சேர்க்கை பெறும் மாணவர்களுக்கான செய்முறை வகுப்புகள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலேயே நடத்தப்பெறும்.

❍ போக்குவரத்து, தங்குமிடம், உணவு ஆகியவற்றிற்கான செலவுகளைக் கற்போர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

**மேற்குறித்த பாடப்பிரிவுகளை குறைந்தபட்ச சேர்க்கை /போதுமான மாணவர் சேர்க்கையின்மை அல்லது நிருவாகக் காரணங்களுக்காகத் தொடர்ந்து நடத்துவதும் அல்லது நீக்குவதும் பல்கலைக்கழக நிர்வாகத்தின் முடிவே இறுதி முடிவாகும்.**

* **கல்வியாண்டில் சேர்க்கை பெற்ற மாணவர்களுக்குரிய தொடர்பு வகுப்புகள் 'பிப்ரவரி' திங்கள் தொடங்கி நடத்தப்படும். தேர்வுகள் 'மே' திங்கள் 2ஆம் வாரத்தில் நடைபெறும்.**

* **நாள்காட்டி ஆண்டில் சேர்க்கை பெற்ற மாணவர்களுக்குரிய தொடர்பு வகுப்புகள் 'செப்டம்பர்' திங்கள் தொடங்கி நடத்தப்படும். தேர்வுகள் 'திசம்பர்' திங்கள் இறுதி வாரத்தில் நடைபெறும்.**

* **நாள்காட்டி ஆண்டில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் போதிய எண்ணிக்கையிலான சேர்க்கை செய்யப்பெற்றால் மட்டுமே அவர்களுக்குரிய தொடர்பு வகுப்புகளும்/தேர்வுகளும் மேற்குறிப்பிட்டுள்ளவாறு நடைபெறும்.**

* **நாள்காட்டி ஆண்டில் சேர்க்கை பெற்ற மணவர்களுக்கு உரிய தொடர்பு வகுப்புகள் போதிய சேர்க்கை இல்லாத நிலை/ நிர்வாகக் காரணங்கள் ஏற்படின் அவ்வகுப்புகள் கல்வியாண்டில் நடைபெறும் வகுப்பின்போது சேர்த்து நடத்தப்படும்.**

* **மேற்குறிப்பிட்டுள்ளவாறு மாணவர்களுக்குரிய தொடர்பு வகுப்புகளும், தேர்வுகளும் நடைபெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தவிர்க்க இயலாத சூழலில் தொடர்பு வகுப்புகளையும், தேர்வுகளையும் மாற்றி அமைத்துக் கொள்ளப் பல்கலைக்கழக நிருவாகத்திற்கு முழு உரிமையுண்டு.**

## விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யும் முறை

- விண்ணபத்தினை நிரப்புமுன் குறிப்பேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களைக் கவனமுடன் படித்திடுக.
- விண்ணப்பிக்கும் பாடத்திற்குத் தேவையான கல்வித் தகுதி தங்களுக்கு இருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளவும். (காண்க-பக். 3-6)
- விண்ணப்பிக்கும் பாடம், குறியீட்டு எண், விருப்பப் பாடம், கல்வி மையம், கற்றல் உதவி மையம் (இருப்பின்) ஆகிய விவரங்களை விண்ணபத்தில் தெளிவாகக் குறிப்பிடவும்.
- **விண்ணப்பப் படிவங்கள் யாவும் தமிழிலேயே நிரப்பப்பட வேண்டும்.**
- விண்ணபப் படிவத்தில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் இணைக்கப்பட்ட சான்றுகளுடன் மாறுபட்டிருப்பின், அவ்விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும். செலுத்தப் பட்ட கட்டணத் தொகையும் மீள வழங்கப்படமாட்டாது.
- அங்கீகாரம் இல்லாத பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்ட பட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
- கல்லூரிகள் அல்லது பல்கலைக் கழகங்களில் முழுநேரமோ/ தொலைநிலை வாயிலாகவோ பட்டம் படிப்பவர்கள் இங்குப் பட்டயம் (Diploma)/சான்றிதழ் (Certificate) படிப்பில் சேர அனுமதிக்கப்படுவர்.

## பல்கலைக்கழகத்தில் நேரடிச் சேர்க்கை (Spot Admission)

கற்றல் உதவி / கல்வி மையங்கள் அருகாமையில் இல்லாதவர்கள் நேரடியாகப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுச் சேர்க்கைப் பெறலாம். அவ்வாறு நேரடிச் சேர்க்கைக்கு விரும்புவோர் கீழ்க்காணும் ஆவணங்களைக் கொண்டு வர வேண்டும்.

- விண்ணப்பப்படிவம் மற்றும் சான்றிதழ்களின் சான்றொப்பமிடப்பட்ட (attested) **மிகத் தெளிவான** நகல்கள் (கல்வித் தகுதி, வயது முதலியன) இருந்தால் மட்டுமே சேர்க்கை செய்யப்பெறும்.
- மூல ஆவணச் சான்றுகள் மற்றும் மாற்றுச் சான்றிதழ் (Certificates in Original, Transfer Certificate) போன்றவை **10ஆம் வகுப்பு, +2 வகுப்பு, பட்டப்படிப்பு – மதிப்பெண் பட்டியல், தற்காலிகச் சான்றிதழ்** அல்லது **பட்டச் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ்** அல்லது **படிப்பு நிறைவுச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், ஆதார் அட்டை** என்ற வரிசையில் இடம்பெற வேண்டும்.
- விண்ணப்பப் படிவத்திற்கும், அடையாள அட்டைக்கும் தேவையான பாஸ்போர்ட் அளவிலான ஒளிப்படம்(Photo)-2
- மூல ஆவணச் சான்றுகள் சரிபார்க்கப்பட்டப் பின்னர் சேர்க்கைக்கு அனுமதிக்கப்படுவர். நேரடிச் சேர்க்கை பெறுவோர் கட்டணங்களுக்கான தொகையினைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள BOI வங்கியில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நேரில் செலுத்தலாம். **செலுத்தப்பட்ட கட்டணத் தொகை எவ்விதக் காரணத்தை முன்னிட்டும் மீள வழங்கப்பட மாட்டாது; ஈடுகட்டப்படவுமாட்டா.**

மூல ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டப் பின்னர் கற்போர்களுக்கு அவை மீள அளிக்கப்படும்.

நேரடிச் சேர்க்கை இயக்குநரால் உறுதி செய்யப்படும். தகுதியில்லாத விண்ணபங்கள் நிராகரிக்கப்படும்.

## கற்றல் உதவி மைய வழி சேர்க்கை (Admission through Learning Support Centres)

கற்றல் உதவி மையங்களின் வழி சேர்க்கை செய்யப்பெறும் மாணவர்களின் சேர்க்கை விண்ணபத்தில் இணைக்கப்பட்டுள்ள அனைத்து சான்றிதழ்களிலும் சான்றொப்பம் பெற்று, தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்கக இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ONLINE PAYMENT என்ற இணைப்பு வழியாக முழுக் கட்டணங்கள் செலுத்தியமைக்கான மின் இரசீதினை விண்ணபத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

கல்விக் கட்டணங்களை ரொக்கமாக கற்றல் உதவி மையங்களில் செலுத்துதல் கூடாது.

கற்போர், பக்க எண் 23-25ல் குறிப்பிட்டுள்ள கட்டணத் தொகையைத் தவிர யாதொரு கட்டணத்தையும் கற்றல் உதவி மையங்களில் செலுத்த வேண்டியதில்லை.

## கல்வி மைய வழி சேர்க்கை (முதுநிலைப் பட்டயம், பட்டயம், சான்றிதழ், அறிமுகநிலைப்படிப்பு பாடங்களுக்கு மட்டும் )

ஒவ்வொரு பாடத்திட்டத்திற்குமுரிய கட்டண விவரங்கள் தனியே தெரிவிக்கப்பட்டுள்ளன (காண்க பக்.23-25)

கல்வி மையங்களின் மூலம் வரும் மாணவர்கள் மொத்தக் கல்விக் கட்டணத் தொகையில் 75 விழுக்காட்டுத் தொகையையும். செயல்முறைப் பயிற்சிக் கட்டணத்தையும் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்கக இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **ONLINE PAYMENT** என்ற இணைப்பு வழியாக செலுத்தி மின் இரசீதினை விண்ணபத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். கல்வி மையப் பங்கான எஞ்சிய 25 விழுக்காட்டுத் தொகையைத் தகவல் மைய ஒருங்கிணைப்பாளரிடம் செலுத்த வேண்டும்.

கல்வி மையங்கள் மூலம் தொலைநிலைக்கல்வி இயக்கக இணையதளவழி பதிவு செய்து அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் இவ்வியக்ககத்தால்

பரிசீலிக்கப்பட்டு உறுதியானபின், சேர்க்கை எண்ணுடன் அடையாள அட்டை அனுப்பிவைக்கப்படும். அவற்றை உரிய கல்வி மையங்கள்வழி கற்போர் பெற்றுக் கொள்ளலாம்.

**கல்விச் சான்றுகளின் நகல்களில் தகவல் மைய ஒருங்கிணைப்பாளர்கள் சான்றொப்பம் செய்யலாம்.**

**கல்விக் கட்டணத்தை(பல்கலைக்கழகப் பங்கு) ரொக்கமாகத் தகவல் மையங்களில் செலுத்துதல் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.**

**கற்போர், பக்க எண் 23-25ல் குறிப்பிட்டுள்ள கட்டணத் தொகைகளைத் தவிர யாதொரு கட்டணத்தையும் கல்வி மையங்களுக்குச் செலுத்த வேண்டியதில்லை.**

**இணைந்த கல்வித் திட்டப் பாடங்களுக்குரிய மைய பங்குத் தொகையினை மைய ஒருங்கிணைப்பாளர்கள் எடுத்துக் கொண்டு மீதித் தொகையினை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் செலுத்த வேண்டும்.**

**இணைந்த கல்வித்திட்ட பாடங்களுக்கு பக்க எண் 30 முதல் 39 வரை தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கல்வி மையங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்.**

**கற்றல் உதவி/கல்வி மைய வழி செலுத்தப்படும் கட்டணங்கள் அனைத்தும் ONLINE PAYMENT வழியாக மட்டுமே செலுத்தி மின்இரசீதினை அனுப்ப வேண்டும். வரைவோலையோ/ பிறவங்கி செலுத்துச்சீட்டோ அனுமதிக்கப்படமாட்டாது.**

## தாமதக் கட்டணம்
## (Late Fee)

இளநிலை/ முதுநிலை கற்போர் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுக் கல்விக்கட்டணத்தை ஒவ்வொரு **ஆண்டும் கால அட்டவணையில் (பக்.26)** குறிப்பிட்டுள்ள **நாளுக்குள்** செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாத நிலையில், கல்விக்கட்டணத்துடன் ஆண்டொன்றுக்கு **ரூ.250/- வீதம், கட்டணம் செலுத்தும் நாள்வரை கணக்கிடப்பட்டு, ஒறுப்புக் கட்டணம் கூடுதலாக** வசூலிக்கப்படும்.

## கட்டணச் சலுகைகள்(Fees Concession)

### 1. முன்னாள் மாணவர்கள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொலைநிலைக் கல்வி வாயிலாகவோ அல்லது முறைக்கல்வி(Regular) வாயிலாகவோ பயின்று தேர்ச்சி பெற்றிருக்கும் முன்னாள் மாணவர்களுக்கு கல்விக்கட்டணத்தில் 10% கட்டணச் சலுகை வழங்கப்படும்.

### 2. மாற்றுத்திறனாளிகள்

மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில், பார்வையற்ற மற்றும் மாற்றுத்திறன் படைத்த மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும். ஆனால், மற்றக் கட்டணங்களான சேர்க்கைக் கட்டணம், பதிவுக் கட்டணம், தகுதிக் கட்டணம், செய்முறைக் கட்டணம், அஞ்சல் செலவுக் கட்டணம், மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் அனைத்தும் செலுத்துதல் வேண்டும். 40 விழுக்காடு ஊனம் இருக்க வேண்டும்.

### 3. கிராமப்புற மாணவர்கள்

கிராமப்புற மாணவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்கு மிகாமல் இருந்தால் கல்விக் கட்டணத்தில் 10% கட்டணச் சலுகை வழங்கப்படும். வட்டாட்சியரிடமிருந்து வருமானச்சான்று மற்றும் இருப்பிடச் சான்று பெற்று விண்ணபத்துடன் இணைக்க வேண்டும்.

### 4. மூத்த குடிமக்கள்

பிறந்த தேதி அடிப்படையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் கல்விக் கட்டணத்தில் 10% கட்டணச் சலுகை வழங்கப்படும்,

### மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் வழி கல்வி உதவித் தொகை

அரசு விதிகளின்படி, முதுநிலை மற்றும் தொழிற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு உழவர் பாதுகாப்புக் கல்வி உதவித் தொகை பெறுவதற்கு பரிந்துரை செய்யப்படும். மாணவர்கள் உழவர் அட்டை, குடும்ப அட்டை, சாதிச்சான்று,

**தொலைநிலைக் கல்வி**
**விண்ணப்பம், பாடங்கள்**
**தொடர்பான விவரங்களுக்கு**
**தொலைபேசி**
**04362 - 227 152**

**தேர்வுத் தொடர்பான அனைத்து**
**விவரங்களுக்கும்**
**தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்**
**தொலைபேசி**
**04362 - 227 845**

பல்கலைக்கழக அடையாள அட்டை ஆகியவற்றின் நகலுடன் விண்ணப்பம் அளித்து தொலைநிலைக்கல்வி இயக்கக இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில் மாணவர்களே கல்வி உதவித் தொகை பெற்றுக் கொள்ளலாம்.

## சேர்க்கை எண் (Enrollment Number)

ஒவ்வொரு பாடப் பிரிவில் சேரும் மாணவருக்கும் சேர்க்கை எண் ஒன்று அளிக்கப்படும். மாணவர்கள் இவ்வியக்ககத்திற்குக் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளும் போது இவ்வெண்ணைக் கட்டாயமாகக் குறிப்பிட வேண்டும்.

ஒவ்வொரு மாணவருக்கும் அந்தந்தப் பாடப் பிரிவிற்குரிய சேர்க்கைக்கு அனுமதி அளித்த பின்னர், அவர்களின் ஒளிப்படத்துடன் கூடிய அடையாள அட்டை இயக்குநர் அவர்களின் கையொப்பம் மற்றும் தொலைநிலைக் கல்வி இயக்கக முத்திரையுடன் அளிக்கப்பெறும். இவ்வடையாள அட்டை குறிப்பிட்ட படிப்புக் காலம் வரை தகுதியுடையதாகும். அடையாள அட்டையைத் தேர்வுக் காலங்களிலும், கற்றல் உதவி மையங்களில் நடைபெறும் பயிற்சி வகுப்புகளிலும் காண்பிக்க வேண்டும்.

அடையாள அட்டை தொலைந்து விட்டால், மாற்று அடையாள அட்டையைப் பெற (Duplicate Identity Card) வேண்டுதல் கடிதம் அளித்து அஞ்சல் வில்லை அளவிலான ஒளிப்படத்தையும், ONLINE PAYMENTவழி ரூ.100/-செலுத்தியதற்கான மின் இரசீதினையும் இணைத்து இயக்ககத்தில் மாற்று அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம்.

## பாடங்கள் அனுப்புதல் (Despatch of Lessons)

பாடப்புத்தகங்கள் தேவைப்படும் மாணவர்கள் கல்விக் கட்டணம் செலுத்தியபின் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம். பாடப்புத்தகங்கள் இருப்பில் இல்லையெனில் ஓரிரு மாதங்களில் (அஞ்சல் அல்லது கூரியரில்) அனுப்பி வைக்கப்படும்.

மையங்களின்வழி சேர்க்கைப் பெற்ற பட்டயம். முதுநிலைப்பட்டயம். சான்றிதழ். அறிமுகநிலைப்படிப்பு மாணவர்களுக்கு அந்தந்த மையங்களுக்கே பாட நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

கற்றல் உதவி மையங்களின்வழி சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கு அந்தந்த கற்றல் உதவி மையங்களுக்கு பாடப்புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பெறும்,

இரண்டாம் ஆண்டுக்கான பாடப் புத்தகங்கள் தேவைப்படும் மாணவர்கள் பாடப்புத்தகத்திற்கு உரிய தொகை செலுத்தியிருப்பின், அந்தந்த ஆண்டின் முழு கல்விக் கட்டணம் செலுத்தப்பட்டதை உறுதி செய்தபின் அஞ்சலில் அனுப்பி வைக்கப்பெறும்.

இரண்டாம் ஆண்டு கல்விக் கட்டணம் செலுத்துவதற்கு பல்கலைக் கழகத்திலிருந்து எந்த அறிவிப்பும் அனுப்பப்படமாட்டாது. மாணவர்களே கல்விக் கட்டணத்தை சேர்க்கை செய்யப் பெற்ற மையம்வழி செலுத்த வேண்டும்.

## தொடர்பு வகுப்புகள் (Personal Contact Programmes)

அனைத்துப் பாடப் பிரிவுகளின் தொடர்பு வகுப்புகளும் சனி, ஞாயிறு மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் கற்றல் உதவி மையங்களில் நடத்தப்படும்.

பக்க எண் 40ல் குறிப்பிட்டுள்ளவாறு செய்முறை உள்ள பாடப்பிரிவுகளுக்குத் தொடர்பு வகுப்புகள் கட்டாயமானவை. அவற்றிற்கு மாணவர் தம் வருகைப் பதிவு கணக்கில் கொள்ளப்படும்.

தொடர்பு வகுப்புகள் நடத்தப்படும் நாள், நேரம், இடம் ஆகிய யாவும் சேர்க்கை உறுதியான பின்னர் ஓரிரு மாதத்திற்குள் குறுஞ்செய்திவழி தகவல் தெரிவிக்கப்படும்.

இணைந்த கல்வித் திட்டங்களுக்கான தொடர்பு வகுப்பு மற்றும் பயிற்சி வகுப்பு விவரங்கள் தனியே கொடுக்கப்பட்டுள்ளன (காண்க: பக். 30-39 ).

நிர்வாகக் காரணம் அல்லது எதிர்பாரா நிகழ்வுகளின்போது தொலைநிலைத் தொடர்பு வகுப்புகளை இயக்ககம் பணி நாளிலேயே நடத்த வேண்டிய தேவை ஏற்படின் அந்நாட்களிலும் வகுப்புகள் நடைபெறும்.

## பயிற்சி வகுப்புகள் (Training Programmes)

தொடர்பு வகுப்புகள் முடிந்தபின்னர் ஒருசில அறிவியல் மற்றும் கல்வியியல் பாடங்களுக்குப் பயிற்சி வகுப்புகள் கட்டாயமாக நடத்தப்பட வேண்டியுள்ளன. பயிற்சி வகுப்பு விகிதங்கள் தனியே தொடக்கத்திலேயே தெரிவிக்கப்பெறும். அனைத்துப் பாடங்களுக்கும் தமிழ்ப்பல்கலைக்கழக வளாகத்திலேயே பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

## முகவரி மாற்றம் (Change of Address)

மாணவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கே எல்லாக் கடிதங்களும், புத்தகங்களும் அனுப்பிவைக்கப்படும். முகவரி மாற்றப்படின், உரிய விவரக் கடிதத்தை ரூ.100/-செலுத்தியதற்கான மின் இரசீதுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கையொப்பமிட்டு அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்காத நிலையில் பழைய முகவரிக்கே தொடர்புகள் மேற்கொள்ளப் பெறும். முகவரி மாற்றப்படின் உரிய விவரத்தை அருகிலுள்ள அஞ்சல் நிலையத்திலும் உடன் தெரிவிக்குமாறு கற்போர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

## பெயர் மாற்றம் (Name Change)

விண்ணப்பத்தில் உள்ள பெயரை மாற்ற (Name Change) வேண்டுமெனில் அப்பெயருக்கு உரிய அரசு பதிவிதழ் சான்று (Government Gazette) பெற்றிருக்க வேண்டும். மேலும், படிப்புக் காலம் முடிந்த பின் பெயரை

மாற்ற விரும்பினால், ஏற்கெனவே, தேர்ச்சி பெற்ற பல்கலைக்கழகம்/பள்ளி/கல்லூரி ஆவணங்களில் பெயரை மாற்றிய விவரங்களுடன் இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைத்தால் மட்டும் பரிசீலனை செய்யப்படும். இவ்விரண்டிற்கும் எழுத்துவழி மற்றும் ஆவணங்களுடன் ரூ.300/- செலுத்தியதற்கான மின் இரசீதினை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

### பாடப்பிரிவு மாற்றம் (Programme/Subjects Change)

ஒரு பாடப் பிரிவில் இருந்து மற்றொரு பாடப் பிரிவில் சேர்வதற்கு, சேர்க்கை உறுதிக்கான காலக் கெடுவான 30 நாட்களுக்குள் ரூ.500/- செலுத்தியதற்கான மின் இரசீதினை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும் அல்லது முதல் தொடர்பு வகுப்பில் கலந்து கொள்ளுவதற்கு முன்னர் (before attending first PCP) விண்ணப்பிக்கலாம். காலந்தாழ்த்தி வரும் விண்ணப்பம் கருத இயலாது. செலுத்திய தொகையும் மீள வழங்கப்படமாட்டாது.

### படிப்பு நிறைவுச் சான்றிதழ் (Course Completion Certificate)

ஒரு பாடப் பிரிவில் முழுமையான காலம் முடிந்த நிலையில் படிப்பு நிறைவுச் சான்றிதழ் (Course Completion Certificate) வேண்டுவோருக்குப் பாடப்பிரிவின் அனைத்துக் கட்டணங்களும் செலுத்தப்பெற்ற நிலையில் சான்றிதழ் வழங்கப்படும்.

### படிப்புச் சான்றிதழ் (Bonafide Certificate)

படிப்புச் சான்றிதழ் (Bonafide Certificate) பெறுவதற்கு ரூ.300/-செலுத்தியதற்கான மின் இரசீதினை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். பல்கலைக்கழகம் அவ்வப்பொழுது கடைப்பிடிக்கும் நடைமுறைகளைப் பின்பற்றி அவ்விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

### இடைவிலகல் சான்றிதழ் (Discontinued Certificate)

இடைவிலகல் சான்றிதழ் கோரும் ஆண்டு வரையிலான கல்விக் கட்டணத் தொகைகள் முழுவதும் செலுத்தப்பட்ட பின்னரே விண்ணப்பம் கருதப்பெறும்.

### மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate)

அறிமுகநிலைப்படிப்பு பயிலும் மாணவர்கள் மட்டும் ரூ. 500/-செலுத்தியதற்கான மின் இரசீதினை இணைத்து விண்ணப்பித்துப் புதிய மாற்றுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

### இடப்பெயர்வுச் சான்றிதழ் (Migration Certificate)

இடப்பெயர்வுச் சான்றிதழ் பெற மாணவர்கள் தேர்ச்சி பெற்ற சான்றிதழ் நகல்கள், முந்தைய மாற்றுச் சான்றிதழ் நகல் ஆகியவற்றுடன், ரூ.500/-செலுத்தியதற்கான மின் இரசீதினை இணைத்து இடப்பெயர்வுச் சான்றிதழைப் பெற விண்ணப்பிக்கலாம்.

### குறை தீர்க்கும் மையம் (Grievance Cell)

கற்போர், தங்களுடைய நியாயமான குறைகளைப் பெயர், பாடப்பிரிவு, சேர்க்கை எண் ஆகிய விவரங்களை நிரப்பித் தொலைநிலைக் கல்வி இயக்கக இயக்குநருக்குத் தெரிவிக்கலாம். (காண்க: பக்.43)

### விசாரணை மற்றும் தொடர்புக்கு (For Enquiries and Contact)

தொலைநிலைக்கல்வி இயக்ககத்தில் பயிலும் மாணவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் அனைத்து விவரங்களையும் (பாடப்பிரிவு விவரம், விண்ணப்பம், சேர்க்கை உறுதிசெய்தல், அடையாள அட்டை, சேர்க்கை எண், பாடப்புத்தகங்கள், தொடர்பு வகுப்புகள், பெயர்/பாடப்பிரிவு/முகவரி மாற்றம், கட்டணம் செலுத்தியதற்கான சான்றிதழ், கல்விக் கட்டணம், இரண்டாம் ஆண்டுக்கு நேரடியாகச் சேர்தல், திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் போன்றவை) பின்வரும் முகவரிக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**இயக்குநர்**
தொலைநிலைக் கல்வி இயக்ககம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 010
தமிழ்நாடு
தொலைபேசி : 04362 -227152
தொலைநகலி: 04362-227434 (Fax)

- எவ்வித வழக்குகளும் (சேர்க்கை, பாடங்கள் அனுப்புதல், தேர்வுக் கட்டணங்கள் செலுத்துதல், தகவல் மையத் தொடர்பு முதலியன) தஞ்சை நீதிமன்ற எல்லைக்குட்பட்டவை. (With regard to any dispute arising in all matters including admission, despatch of lessons, remittance of fees, Personal Contact Programme, Examinations, etc., only the courts and Tribunals having jurisdiction within Thanjavur and not over any other place.)

- **சேர்க்கை தொடர்பாக யாரும் எவ்வித உரிமையும் கோர இயலாது. தொலைநிலைக்**

**கல்வி இயக்ககத்தால் அஞ்சல் வழியாக அனுப்பப்பெறும் விவரங்கள் யாவும் காலந் தாழ்ந்தாலோ காணாமல் போனாலோ அதற்குத் தொலைநிலைக் கல்வி இயக்ககம் எவ்விதப் பொறுப்பும் ஏற்காது.**

## இதர கட்டணங்கள் (Miscellaneous Fees)

பின்வரும் கட்டணங்களை தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளங்களில் குறிப்பிடப்பட்டுள்ள **ONLINE PAYMENT** வழியாக செலுத்தி மின் இரசீதினை **The Director, DDE, Tamil University, Thanjavur-10** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | பெயர் மாற்றம் (Name change) | ரூ.300/- |
| 2. | பாடப்பிரிவு மாற்றம் (Subject Change) | ரூ.500/- |
| 3. | முகவரி மாற்றம் (Change of Address ) | ரூ.100/- |
| 4. | அடையாள அட்டை (நகல்) (Identity Card (copy)) | ரூ.100/- |
| 5. | வருகைச் சான்றிதழ் (நகல்) (Attendance Certificate (copy)) | ரூ.100/- |
| 6. | படிப்பு நிறைவுச் சான்றிதழ் / (நகல்) Course Completion Certificate/(copy) | ரூ.500/- |
| 7. | இடைவிலகல் சான்றிதழ்(நகல்) (Certificate for Discontinution (copy)) | ரூ.300/- |
| 8, | படிப்புச் சான்றிதழ் (நகல்) (Bonafide Certificate (copy)) | ரூ.300/- |
| 9. | மாற்றுச்சான்றிதழ் / (நகல்) (Transfer Certificate / (copy)) | ரூ.500/- |
| 10. | இடப்பெயர்வுச் சான்றிதழ் (நகல்) (Migration Certificate / (copy)) | ரூ.500/- |

## தேர்வுகள் (Examinations)

கல்விக் கட்டணம் முழுமையாக செலுத்தாத மாணவர்கள் கண்டிப்பாக தேர்வெழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

தேர்வுத் தொடர்பான பிற விவரங்கள் அனைத்தையும் (தேர்வுகள், தேர்வு விண்ணப்பம், தேர்வுக் கட்டண விவரம், தேர்வு முடிவுகள், மதிப்பெண் பட்டியல், தற்காலிகச் சான்றிதழ், பட்டம்/பட்டயம்/சான்றிதழ் போன்றவை) கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பித்து அறிந்து கொள்ளலாம்.

**கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டாளர் (பொ)**
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 010 தமிழ்நாடு
தொலைபேசி : 04362 -227845
தொலைநகலி : 04362-227434

## செய்முறை வகுப்பு / தேர்வு Practical Classes and Examinations

முதுநிலையில் செய்முறை உள்ள பாடப்பிரிவுகளுக்கான செய்முறைவகுப்புகள். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நேரடிச் சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களுக்கு தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும் . கற்றல் உதவி மையவழி சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கு அந்தந்த கற்றல் உதவி மையங்களில் வைத்தும் நடத்தப்பெறும். செய்முறைத் தேர்வுகள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மட்டுமே நடைபெறும்.

## தகவல் தொழில்நுட்பவழி தொலைநிலைக் கல்வி (Information and Communication Technology)

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககம் 2017 கல்வி ஆண்டு முதல் உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் பயன்பெறும் பொருட்டுப் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் வசதிகளுக்குட்பட்டுத் தகவல் தொழில்நுட்ப வழி தொலைநிலைக்கல்வி பாடங்களுக்கான மாணவர் சேர்க்கை தொடங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் ICT மாணவர் சேர்க்கை School Guru என்கின்ற முகவர் வழி மாணவர் சேர்க்கை தமிழகத்திற்கு வெளியேயும் உலகின் பிற நாடுகளிலு;ம் நமது தொலைநிலைக்கல்வி மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது, இது குறித்த மேலும் விவரங்களுக்கு ict.tamiluniversity.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம். மேலும் தற்போதைய மத்திய அரசின் வரிச்சட்டமான GST பற்றிய சான்றிதழ் கல்வியும் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், இணையதளவழி தகவல் தொழில்நுட்ப தொலைநிலைக்கல்வி நடத்தி வருகின்றது. இப்பாடங்களுக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குள்ளேயும் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகின்றது.

## கல்விக் கட்டணம் செலுத்துதல்

கல்வி மற்றும் சேர்க்கை தொடர்பான கட்டணங்கள் உட்பட, பிற அனைத்துக் கட்டணங்களையும் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளங்களில் குறிப்பிட்டுள்ள ONLINE PAYMENT வழியாக மட்டுமே செலுத்த வேண்டும். செலுத்திய பின் மின் இரசீதினை இயக்ககத்தில் அளித்தல் வேண்டும்.

| **படிப்பு** | பாடப் பிரிவு | ஆண்டு | நுழைவுக் கட்டணம் | சிறப்புக் கட்டணம் | கல்விக் கட்டணம் | பிற பல்கலைக் கழகப் படிப்பு அங்கீகரிப்புக் கட்டணம் | பிற கட்டணங்கள் | மொத்தக் கட்டணம் | சோதனைக் கூடம்/செயல் முறைப் பயிற்சிக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதுநிலை | தமிழ், வரலாறு | முதல் | 220 | 990 | 2540 | 330 | 770 | 4850 | - |
| | ஆங்கிலம், கணிதம் வணிகவியல், | இரண்டாம் | - | - | 3750 | - | 1100 | 4850 | |
| | உளவியல் | முதல் | 220 | 990 | 1990 | 330 | 770 | 4300 | +1650 |
| | | இரண்டாம் | - | - | 3200 | - | 1100 | 4300 | +1650 |
| | சமூகப் பணியியல் | முதல் | 220 | 1870 | 4210 | 550 | 2400 | 9250 | - |
| | | இரண்டாம் | - | - | 6300 | - | 2950 | 9250 | - |
| | எம்எல்ஐஎஸ் | ஓராண்டு | 110 | 660 | 1880 | 220 | 880 | 3750 | +1650 |
| | சுற்றுச்சூழல் அறிவியல் | முதல் | 220 | 990 | 2540 | 330 | 770 | 4850 | +2750 |
| | | இரண்டாம் | - | - | 3750 | - | 1100 | 4850 | +2750 |
| | தாவரவியல் | முதல் | 220 | 990 | 4740 | 330 | 770 | 7050 | +4950 |
| | | இரண்டாம் | - | - | 5950 | - | 1100 | 7050 | +4950 |
| | யோகா | முதல் | 200 | 990 | 2210 | 330 | 1100 | 4850 | +2200 |
| | | இரண்டாம் | - | - | 3420 | - | 1430 | 4850 | +2200 |
| | புவியியல் | முதல் | 200 | 990 | 2540 | 330 | 770 | 4850 | +1650 |
| | | இரண்டாம் | - | - | 3750 | - | 1100 | 4850 | +1650 |
| **முதுநிலைப் பட்டயம்** | பி.ஜி.டி.ஜி.சி | ஓராண்டு | 220 | 1265 | 2770 | 440 | 605 | 5300 | +2200 |
| | இணைய சேவை | ஓராண்டு | 220 | 1265 | 3320 | 440 | 605 | 5850 | +2200 |
| | யோகா | ஓராண்டு | 220 | 1265 | 3320 | 440 | 605 | 5850 | +2200 |
| **பட்டயம்** | யோகா ஆசிரியர் பயிற்சி, கோயில் அர்ச்சகர் பயிற்சி, மூலிகை அறிவியல், கோயிற்கட்டடக்கலை, சுவடியியல், மருத்துவ மூலிகை அழகுக்கலை, சோதிடவியல், பேச்சுக்கலை, கல்வெட்டியல் | | 220 | 1265 | 2770 | 440 | 605 | 5300 | +1650 |
| | மரபுவழி தமிழ் மருத்துவம் | | 1650 | 2365 | 11020 | 550 | 3465 | 19050 | +3300 |
| | யோகா | | 220 | 1265 | 3320 | 440 | 605 | 5850 | 2200 |
| **சான்றிதழ்** 6 மாதம் | நூலகம் மற்றும்தகவலறிவியல் | | 220 | 715 | 1230 | 440 | 495 | 3100 | 550 |
| | தமிழ்ப் புலவர் பயிற்சி | | 440 | 1265 | 4860 | 220 | 2365 | 9150 | - |
| | சுவடியியல் | | 110 | 605 | 1890 | 220 | 825 | 3650 | - |
| | யோகா | | 220 | 715 | 1670 | 440 | 605 | 3650 | 1100 |
| **அடிப்படைக் கல்வி** | அறிமுக நிலைப்படிப்பு (Introductory Course) | ஓராண்டு | 110 | 605 | 790 | 220 | 825 | 2550 | - |

**கல்விக் கட்டணப் பங்கீட்டு விவரம்** (Break-up details)

| படிப்பு | பாடப் பிரிவு | | நுழைவுக் கட்டணம் | சிறப்புக் கட்டணம் | கல்விக் கட்டணம் | பிற பல்கலைக் கழகப் படிப்பு அங்கீகரிப்புக் கட்டணம் | பிற கட்டணங்கள் | மொத்தக் கட்டணம் | சோதனைக் கூடம்/செயல் முறைப் பயிற்சிக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **தொழிற்முறைப் பாடப்பிரிவுகள்(Professional Courses)** | | | | | | | | |
| 1. | **எம்.பி.ஏ.,** | முதல் | 275 | 1540 | 8105 | 550 | 1430 | 11900 | - |
| | | இரண்டாம் | - | - | 9920 | - | 1980 | 11900 | - |
| 2. | **பி.ஜி.டி.சி.ஏ.,** ஓராண்டு | | 550 | 1265 | 2775 | 440 | 770 | 5800 | +(2200) |

| **படிப்பு** | **பட்டப் படிப்பு** | ஆண்டு | கல்விக் கட்டணம் | செய்முறை வகுப்புக் கட்டணம் | மொத்தக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| முதுநிலை | இசை. | முதல் | 15850 | 5500 | 21,350 |
| | பரதநாட்டியம் | இரண்டாம் | 15850 | 5500 | 21,350 |

# தொடர் வகுப்பு மையங்கள் வழி நடத்தப்படும் பாடப்பிரிவுகள்

**கல்விக் கட்டணப் பங்கீட்டு விவரம்** (Break-up details) - **இசைத்துறைப் பாடப்பிரிவுகள்**

**பட்டயம்** - இசை, பரதநாட்டியம், இசை ஆசிரியர் பயிற்சி, பரதநாட்டிய ஆசிரியர் பயிற்சி, கருவி இசை (வீணை,வயலின்,புல்லாங்குழல், நாதஸ்வரம்), கருவிஇசை(மிருதங்கம், தவில்), நட்டுவாங்கம், மேடைநிகழ்ச்சித் தொகுப்பு.
**சான்றிதழ்** - இசை, பரதநாட்டியம், கருவிஇசை (மிருதங்கம், தவில்)

| **பட்டப் படிப்பு** | ஆண்டு | கல்விக் கட்டணம் | செய்முறை வகுப்புக் கட்டணம் | மொத்தக் கட்டணம் |
|---|---|---|---|---|
| பட்டயம் | ஓராண்டு | 11350 | 2200 | 13,550 |
| ஆசிரியர் பயிற்சிப் படிப்புகள் | ஓராண்டு | 4750 | 900 | 5650 |
| சான்றிதழ் படிப்புகள் | ஓராண்டு | 3650 | 550 | 4200 |

**கல்விக் கட்டணப் பங்கீட்டு விவரம்** (Break-up details) - **வரைகலை மற்றும் வண்ணக்கலை பாடப்பிரிவுகள்**

| **பட்ட வகுப்பு** | ஆண்டு | கல்விக் கட்டணம் | செய்முறை வகுப்புக் கட்டணம் | மொத்தக் கட்டணம் |
|---|---|---|---|---|
| பட்டயம் | ஓராண்டு | 9150 | 2200 | 11350 |
| சான்றிதழ் | 6 மாதங்கள் | 7500 | 1650 | 9150 |

**கல்விக் கட்டணப் பங்கீட்டு விவரம்** (Break-up details) - **அக்குபங்சர் பாடப்பிரிவுகள்**

| **பட்ட வகுப்பு** | ஆண்டு | கல்விக் கட்டணம் | செய்முறை வகுப்புக் கட்டணம் | மொத்தக் கட்டணம் |
|---|---|---|---|---|
| பட்டயம் | ஓராண்டு | 28600 | 2200 | 30800 |
| சான்றிதழ் | 6 மாதங்கள் | 20900 | 3300 | 24200 |

**கல்விக் கட்டணப் பங்கீட்டு விவரம்** (Break-up details) - **மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மீகம்**

| **பாடப்பிரிவு** | **ஆண்டு** | **கல்விக்கட்டணம்** |
|---|---|---|
| பட்டயம் | ஓராண்டு | 3300 |
| சான்றிதழ் | 6 மாதங்கள் | 2200 |

**கல்விக் கட்டணப் பங்கீட்டு விவரம்** (Break-up details) - **வைணவப் பாடப்பிரிவுகள்**

**முதுநிலைப் பட்டயம்** - வைணவம், ஸ்ரீபாஷ்யம், **பட்டயம்** - தமிழ் இலக்கியங்களில் வைணவக் கூறுகள், வைணவ உரைகள், இலக்கிய நோக்கில் திவ்ய பிரபந்தம், ஒப்பிலக்கியம் தேவாரம் திவ்யபிரபந்தம், ஸ்ரீராமானுஜர். **சான்றிதழ்** - வைணவம், ஆழ்வார்கள் ஆச்சார்யர்கள் வாழ்வும் பணியும், வைணவ ஆலயங்களில் கல்வெட்டுக்கள், வேதங்கள் அதன் வேதாந்தங்கள்.

| **பட்ட வகுப்பு** | ஆண்டு | கல்விக் கட்டணம் |
|---|---|---|
| முதுநிலைப் பட்டயம் | ஓராண்டு | 4400 |
| பட்டயம் | ஓராண்டு | 4400 |
| சான்றிதழ் | 6 மாதங்கள் | 2750 |

**இணையவழிக் கல்வி இதர பாடப்பிரிவுகள்** (Other ICT Courses)

**சான்றிதழ் - திறன் மேம்பாட்டுப் பயிற்சி** (ELSP)

காலம் : மூன்று மாதங்கள்

பதிவுக் கட்டணம்: **ரூ.100** மட்டும்

தகுதி : +2 தேர்ச்சி (அ) அதற்கு இணையானது

**சான்றிதழ் - GST வரி**

காலம் : மூன்று மாதங்கள்

சேர்க்கைக் கட்டணம்: **ரூ.1500** மட்டும்

தகுதி : +2 தேர்ச்சி (அ) அதற்கு இணையானது

## முதுநிலைப் பட்டம்,முதுநிலைப்பட்டயம். பட்டயம்,சான்றிதழ் மற்றும் அடிப்படைக் கல்வி பாடப்பிரிவுகள்

### கால அட்டவணை

| பொருண்மை | | கல்வியாண்டு | நாள்காட்டி ஆண்டு |
|---|---|---|---|
| 1. விண்ணப்பம் வழங்குதல் | | சூலை மாதம் முதல் வாரத்திலிருந்து | சனவரி முதல் வாரத்திலிருந்து |
| 2. நிறைவு செய்த விண்ணப்பங்களை முழுக் கட்டணத்துடன் அளிக்க வேண்டிய இறுதி நாள் | | ஆகஸ்டு 31 | பிப்ரவரி 28 |
| 3. இரண்டாம், மூன்றாம் ஆண்டு கல்விக் கட்டணம் செலுத்த இறுதி நாள் | | ஆகஸ்டு 31 | மார்ச் 31 |
| 4. தொடர்பு வகுப்புகள் | கருத்தியல் (theory) தாள்களுக்கு | டிசம்பர் முதல் மார்ச்சு வரை | சூன் முதல் செப்டம்பர் வரை |
| | செய்முறை | மார்ச்சு | செப்டம்பர் |
| | 6 மாத சான்றிதழ் படிப்புகளுக்கு | நவம்பர் முதல் வாரத்திலிருந்து | மே மாதம் முதல் வாரத்திலிருந்து |
| | செய்முறை | திசம்பர் முதல் வாரம் | ஜூன் முதல் வாரம் |
| 5. தேர்வு விண்ணப்பம் அளிக்க இறுதி நாள் (மாறுதலுக்குட்பட்டது) | | ஏப்ரல் 30 | நவம்பர் 30 |
| 6 மாத சான்றிதழ் படிப்புகளுக்கு மட்டும் | | நவம்பர் 30 | ஜூன் 7 |
| 6. தாமத ஒறுப்புக் கட்டணத்துடன் தேர்வு விண்ணப்பம் அளிக்க இறுதி நாள் (மாறுதலுக்குட்பட்டது) | | மே 5 | டிசம்பர் 5 |
| 6 மாத சான்றிதழ் படிப்புகளுக்கு மட்டும் | | திசம்பர் 15 | ஜூன் 20 |
| 7. தேர்வுத் தொடக்கம் | | மே இரண்டாம் வாரம் முதல் | டிசம்பர் நான்காம் வாரம் முதல் |
| 6 மாத சான்றிதழ் படிப்புகளுக்கு மட்டும் | | டிசம்பர் நான்காம் வாரம் ஏதுவான நாட்களில் | ஜூன் நான்காம் வாரத்தில் ஏதுவான நாட்களில் |
| 8. தேர்வு முடிவுகள் வெளியீடு | | ஆகஸ்ட்டு | மார்ச்சு |
| 6 மாத சான்றிதழ் படிப்புகளுக்கு மட்டும் | | மார்ச் | ஆகஸ்டு |

* மேற்குறிப்பிட்ட கால அட்டவணை எதிர்பாராத நிகழ்வுகளின் அடிப்படையில் மாறுதலுக்கு உட்பட்டது.
* பல்கலைக்கழக நிருவாக நிலைமைக்கேற்ப மாற்றங்களுக்கு உட்பட்டது.
* மாற்றங்கள் பல்கலைக்கழக இணைய தளத்தில் (*www.tamiluniversitydde.in*) வெளியிடப்படும்.
* இறுதி நாளுக்குப் பின்னர்க் கல்விக் கட்டணம் செலுத்த ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ.250/- வீதம் ஒறுப்புக் கட் டணம் செலுத்த வேண்டும்.

# கற்றல் உதவி மைய முகவரிகள்

| வ. எண் | மாவட்டம் | க.உ. மை.எண் | முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|---|
| 1. | வேலூர் | L01 | சத்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மார்கப்பந்து நகர், ரசதாபுரம், கீழ்விசாகம், வாலாஜா தாலுக்கா, வேலூர் – 632 509 | **வேலூர்** 9944135585 |
| 2 | வேலூர் | L02 | கே,கே,எஸ்,மணி கல்வியியல் கல்லூரி, எண். 78, சி.சி. ரோடு, வல்லம், வேலூர் மாவட்டம் – 632 311. | **வேலூர்** 9442250939 |
| 3 | வேலூர் | L03 | வேலூர் கல்வியியல் கல்லூரி, சிங்கினியம்மன் கோவில், வல்லன்டராமன் அஞ்சல், விரிஞ்சிபுரம் வழி, வேலூர் – 104 | **வேலூர்** 9710589231 |
| 4. | சென்னை | L04 | புனித பிரிட்டோஸ் கல்லூரி. 2வது மெயின் ரோடு, ஆபிசர் காலனி, ஆதம்பாக்கம், சென்னை – 600 088 | **ஆதம்பாக்கம்** 9094125439 |
| 5. | திருவண்ணா மலை | L05 | Dr. மீனாட்சி கல்வியியல் கல்லூரி, முறையாறு, செ.நாச்சிப்பட்டு அஞ்சல். செங்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் – 606 709 | **செங்கம்** 8940560300 |
| 6. | திருவள்ளூர் | L06 | T.V.M. கல்வியியல் கல்லூரி, 66 டி.வி.எம். நகர், பொதட்டூர்பேட்டை, பள்ளிப்பட்டு வட்டம், திருவள்ளூர் மாவட்டம் – 631 208 | **பொதட்டூர்பேட்டை** 8344519435 8760712473 |
| 7. | விழுப்புரம் | L07 | V.E.T. கல்லூரி, எண் 24. திருச்சி மெயின்ரோடு, மருத்துவமனை எதிரில், விழுப்புரம் – 605 602 | **விழுப்புரம்** 9047444666 |
| 8. | திருநெல்வேலி | L08 | ஸ்டெல்லா மேரீஸ் கல்வியியல் கல்லூரி, சிவகிரி, திருநெல்வேலி மாவட்டம் – 627 757 | சிவகிரி 9994380017 9994367346 |
| 9. | விருதுநகர் | L09 | நாஷியா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கல்லுப்பட்டி, காரியாபட்டி அஞ்சல், விருதுநகர் தாலுகா – 626 106. | கல்லுப்பட்டி 9750159905 |
| 10. | தேனி | L10 | செல்லம்மாள் கல்வியியல் கல்லூரி, E.B.அலுவலகம் பின்புறம், தேனி ரோடு, ஆண்டிப்பட்டி தாலுக்கா, தேனி மாவட்டம் – 625 512. | தேனி 9942330605 |

| வ. எண் | மாவட்டம் | க.உ.மைய எண் | முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|---|
| 11. | கிருஷ்ணகிரி | L11 | இராஜீவ்காந்தி கல்வியியல் கல்லூரி, கிருஷ்ணகிரி, காட்டிநாயனப்பள்ளி (கி), கம்மம்பள்ளி அஞ்சல், குப்பம் ரோடு, கிருஷ்ணகிரி – 635 120. | கிருஷ்ணகிரி 9442675999 7373732524, 7373200062 |
| 12. | சேலம் | L12 | சேலம் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி. பெங்கலூர் மெயின் ரோடு. மாமாங்கம். சேலம் – 636 303 | மாமாங்கம் 9698968333 9367166151 |
| 13. | திருப்பூர் | L13 | கருப்பண்ணன் மாரியப்பன் கலை அறிவியல் கல்லூரி. செட்டியார் பாளையம். முத்தூர் வட்டம். காங்கேயம் தாலுக்கா. திருப்பூர் – 638 303 | காங்கேயம் 9842029409, 9944392919 |
| 14. | கோயமுத்தூர் | L14 | தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி, சிறுவாணி முதன்மைச் சாலை, பேரூர். கோயமுத்தூர் – 641 010 | பேரூர் 9095111177 |
| 15. | கரூர் | L15 | அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பண்டுதகாரன் புதூர், மண்மங்களம், கரூர் – 639 006. | மண்மங்களம் 9367136195 |
| 16. | சிவகங்கை | L16 | ரோஸ்லின் கல்வியியல் கல்லூரி, விக்டோரியா நகர், சிவகங்கை – 630 561. | சிவகங்கை 9787585300 |
| 17 | திருச்சிராப்பள்ளி | L17 | கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி. எண்.9, பென்வெல்ஸ் ரோடு, கன்டோன்மென்ட், திருச்சிராப்பள்ளி – 620 001. | திருச்சிராப்பள்ளி 9894550033 |
| 18 | சென்னை | L18 | தமிழ் இசைக்கல்லூரி, தமிழ் இசைச் சங்கம், இராஜா அண்ணாமலை மன்றம், 5, எஸ்பிளனேடு சாலை, சென்னை – 108. | சென்னை 9444925880 |
| 19 | நாகப்பட்டினம் | L19 | பெஸ்ட் கல்வியியல் கல்லூரி, மயிலாடுதுறை தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் | தருமபுரி 9944491070 |
| 20 | தருமபுரி | L20 | கிரிஸ்ட் பெண்கள் கல்வியியல் கல்லூரி, கிரிஸ்ட் கார்டன், கலெக்டர் பங்களா பின்புறம், .ஜெட்டி அள்ளி அஞ்சல், தருமபுரி மாவட்டம் – 636 807 | தருமபுரி 9842994874 |

# தொடர் வகுப்பு மைய முகவரிகள்

1. **திருச்சிராப்பள்ளி மறை மாவட்டக் கல்விச் சங்கம்**
அமலோற்பவி அலுவலக வளாகம், எண்:4, திண்டுக்கல் ரோடு,
திருச்சி -620 001.
தொ.பே:0431-2480730 / 40 / 50

2. **கம்பம் அகாடமி ஆஃப் அக்குபங்சர்**
33ஏ, கிராமச் சாவடித் தெரு, கம்பம் - 625 516.
உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம்
தொ.பே: 04554-292295; 94880 11505, 96000 22022

3. **களஞ்சியம் அறக்கட்டளை,**
செவ்வந்தி சாலை, அண்ணாமலை நகர், திருச்சி
தொ.பே.: 0431-2742280, 7708617790.

4. **டேனியல் கல்வி மற்றும் சமூக அறக்கட்டளை,**
85/26, 3வது கிராஸ்,
அருளானந்த நகர், தஞ்சாவூர் - 613 007.
தொ.பே: 04362-276274, 9443127627,9488003456

5. **Rajyoga Education and Research Foundation ( Education Wing),**
Brahma Kumaris, Vishwa Shanti Bhavan,
36, Meenakshi Nagar, Behind P&T Nagar,
Madurai-625017
தொ.பே: 9442442476

6. **தமிழ்இசைக் கல்லூரி, தமிழ் இசைச் சங்கம்,**
ராஜா அண்ணாமலை மன்றம்,
5, எஸ்பிளனேடு சாலை, சென்னை - 600108.
தொ.பே: - 044 2534125/25330350, 9444925880

7. **அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்,**
**ஆழ்வார்கள் ஆச்சார்யர்கள் வைணவ ஆய்வு மையம்**
ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி - 6
தொ.பே: 0431-2432246

## இணையவழிக் கல்வி (ICT Enabled Programs) மைய முகவரி

8. **Schoolguru EduServe Private Limited,**
903, Western Edge II, Western Express Highway,
Borivali (E), Mumbai - 400066.
தொ.பே: 02266944500/ 7339136847

## தொடர்பு வகுப்பு மையங்கள் தொடர்பான விவரங்கள்

**1.**

**பாடப்பிரிவுகள்: இசை, பரதநாட்டியம், கருவி இசை - பட்டயம் மற்றும் சான்றிதழ் இசை ஆசிரியர் பயிற்சி, பரதநாட்டிய ஆசிரியர் பயிற்சி, மேடைநிகழ்ச்சித் தொகுப்பு, நட்டுவாங்கம் - பட்டயம்**

**நிறுவனம்:** **திருச்சிராப்பள்ளி மறை மாவட்டக் கல்விச் சங்கம்**

**திருச்சி நிறுவன ஒருங்கிணைப்பாளர்:** **திரு அந்துவான்**
9345111716, 0431-2401010, 0431-2480730/40/50

**சேர்க்கைக்கான காலம்** : நாட்காட்டியாண்டு-ஜன. 1 முதல் பிப்ரவரி 28 வரை
கல்வியாண்டு - ஜுலை 1 முதல் ஆகஸ்டு 31 வரை

**திருச்சிராப்பள்ளி மறை மாவட்டத்தின் பிற மையங்கள்** :

1. Don Bosco College of Art & Design,
   No.45, Landons Road, Kilpauk, Chennai-600 010
   Ph: 044-26423930

2. Divyodaya, Inter-Religious Centre
   91, Geetha Hall Road, Coimbatore-641 108
   Ph: 0422-2300966

3. Nanjil Catholic College of Arts and Science,
   Nedumcode, Kaliyakkavilai-629 153
   Kanyakumari District, Tamil Nadu

4. St.Joseph’s Industrial Training Institute
   1st cross, Old Krishnagiri Road, Hosur-635 109

**கல்வித் தகுதி**

| பாடப்பிரிவு | கல்வித்தகுதி | பயிற்றுமொழி |
|---|---|---|
| பட்டயப் படிப்பு (1 ஆண்டு)<br>1. **பரதநாட்டியம்** | பத்தாம் வகுப்புத் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் பரதநாட்டியத்தில் முழுமார்க்கம் (அலாரிப்பு முதல் தில்லானா வரை) தெரிந்திருக்க வேண்டும் | தமிழ்-ஆங்கிலம் |

| | | |
|---|---|---|
| 2. **இசை** | பத்தாம் வகுப்பு தேர்ச்சி (அ) இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் தமிழக அரசின் கீழ்நிலைத் தேர்வு பாடத்திட்டம் தெரிந்திருக்க வேண்டும். | தமிழ்-ஆங்கிலம் |
| 3. **கருவி இசை (மிருதங்கம், தவில், வீணை, வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம்)** | பத்தாம் வகுப்பு தேர்ச்சி (அ) இணையான தகுதியுடன் தொடர்புடைய இசைக்கருவியில் சான்றிதழ் தேர்ச்சி | தமிழ்-ஆங்கிலம் |
| **4. மேடை நிகழ்ச்சித் தொகுப்பு** | மேல்நிலைப்பள்ளி(+2) தேர்ச்சி அல்லது 10+3 தொழில்நுட்பப் பட்டயம் அல்லது +2க்குச் சமமான படிப்புத் தேர்ச்சி | தமிழ்-ஆங்கிலம் |
| 5. **நட்டுவாங்கம்** | +2 தேர்ச்சி அல்லது 10+3 ஆண்டு நாட்டியத்தில் பட்டயச் சான்றிதழ் கூடுதல் தகுதியாக நடனத்தில் 5 வருட குருகுல பயிற்சி அல்லது நடனத்தில் சான்றிதழ் அல்லது பட்டயம் தேர்ச்சி(கட்டாயம் இருத்தல் வேண்டும்) அல்லது தொலைக்காட்சியில் A Grade கலைஞராக இருத்தல் வேண்டும். | தமிழ்-ஆங்கிலம் |
| **சான்றிதழ் படிப்பு** | | |
| 6. **பரதநாட்டியம்** (6 மாதங்கள்) | எட்டாம் வகுப்புத் தேர்ச்சி அல்லது இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும் | தமிழ்-ஆங்கிலம் |
| 7.**இசை** (6 மாதங்கள்) | எட்டாம் வகுப்புத் தேர்ச்சி அல்லது இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும் | தமிழ்-ஆங்கிலம் |
| 8. **கருவி இசை (மிருதங்கம். தவில்)** (1 ஆண்டு) | எட்டாம் வகுப்புத் தேர்ச்சி அல்லது இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும் | தமிழ்-ஆங்கிலம் |
| **ஆசிரியர் பயிற்சி படிப்பு**(ஓராண்டு) | | |
| 9. **பரதநாட்டியம்** | மேல்நிலை வகுப்புத் (+2) தேர்ச்சி மற்றும் தொடர்புடைய துறையில் சான்றிதழ் படிப்புத் தேர்ச்சி | தமிழ்-ஆங்கிலம் |
| 10. **இசை** | மேல்நிலை வகுப்புத் (+2) தேர்ச்சி மற்றும் தொடர்புடைய துறையில் சான்றிதழ் படிப்புத் தேர்ச்சி | தமிழ்-ஆங்கிலம் |

**தொடர்பு வகுப்புகள்:** திருச்சிராப்பள்ளி மறைமாவட்டக் கல்வி சங்கத்தால் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் திருச்சி மறைமாவட்டக் கல்வி சங்கம் மற்றும் அதன் பிற மையங்களில் தொடர்பு வகுப்புகள் நடத்தப்படும். இதன் விவரம் அந்நிறுவனத்தால் மாணவர்களுக்குத் தனியே தெரிவிக்கப்பெறும்.

**தேர்வு விவரம்**: தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வித் தேர்வுப் பிரிவினால் தெரிவிக்கப்பெறும்.

**கட்டண விவரம்:** பிற பொதுப் பாடப்பிரிவுகளின் கல்விக் கட்டண விவரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.

**பாடப்பிரிவுகள்: தொடுசிகிச்சை அறிவியல்**
**பட்டயம் மற்றும் சான்றிதழ்**

**நிறுவனம்:** **கம்பம் அகாடமி ஆஃப் அக்குபங்சர், கம்பம்**

**நிறுவன ஒருங்கிணைப்பாளர்:** **ஹீலர் போஸ் கே.முகமது மீரா**
94880 11505, 04554-292295

**சேர்க்கைக்கான காலம்:** நாட்காட்டியாண்டு- ஜனவரி 1 முதல் பிப்ரவரி 28 வரை
கல்வியாண்டு - ஜுலை 1 முதல் ஆகஸ்டு 31 வரை

**பொது மையங்களுக்கான ஊக்கத்தொகை:** மாணவர் ஒன்றுக்கு ரூ.1000/- (கம்பம் அகாடமியைச் சார்ந்தது)
(மைய சேர்க்கை மட்டும்)

**கம்பம் அகாடமி ஆஃப் அக்குபங்சர் பயிற்சி மையங்கள்:**

| | | |
|---|---|---|
| தஞ்சாவூர் | தமிழ்ப் பல்கலைக் கழகம், வாகை வளாகம், திருச்சி சாலை, தஞ்சாவூர். | 04362 - 227152 |
| கம்பம் | 33ஏ, கிராமச்சாவடித் தெரு, கம்பம் - 625 516 | 04554-292295<br>89036-89063<br>97882-23366 |
| கோவை | 111, லட்சுமி ஹால் எதிரில், மெயின் ரோடு, போத்தனூர், கோவை | 96776 41201<br>98946 55750 |
| சென்னை | அக்குபங்சர் இல்லம், 12 சூளைமேடு ஹைவே ரோடு, நுங்கம்பாக்கம் ரயில் நிலையம் அருகில், சென்னை | 97106-85287<br>98414-65989 |
| இராமநாதபுரம் | வைசியாள் தெரு, இராமநாதபுரம் | 98436-69766<br>90031-73333 |
| சேலம் | ஜெயலட்சுமி பிளாசா, சொர்ணபுரி, சேலம் | 94437-34598<br>98429-81489 |

| பாடப்பிரிவு | கல்வித்தகுதி | பயிற்றுமொழி |
|---|---|---|
| **பட்டயம்** (ஓராண்டு)<br>அக்குபங்சர் -419<br>(Acupuncture ) | +2 தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது | தமிழ்/ஆங்கிலம் |
| **சான்றிதழ்** (ஓராண்டு)<br>அக்குபங்சர்<br>(Acupuncture)-506 | பத்தாம் வகுப்பு / அதற்கு இணையான கல்வி | தமிழ்/ஆங்கிலம் |

**தொடர்பு வகுப்புகள்:** **கம்பம் அகாடமி ஆஃப் அக்குபங்சர் நிறுவனத்தாலயே** தொடர்பு வகுப்புகள் நடத்தப்பெறும். இவ்விவரம் அந்நிறுவனத்தால் மாணவர்களுக்குத் தனியே தெரிவிக்கப் பெறும்.
மாதத்தில் இரண்டு நாட்கள் (ஜுலை மாதம் முதல்) சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் தொடர்பு வகுப்புகள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும், கம்பம் அகாடமி மையங்களிலும் நடைபெறும்.

**தேர்வு விவரம்**: தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வித் தேர்வுப் பிரிவினால் நடத்தப்பெறும்.

**கட்டண விவரம்:** பிற பொதுப் பாடப்பிரிவுகளின் கல்விக் கட்டண விவரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**3.** **பாடப்பிரிவுகள்: தொடுசிகிச்சை அறிவியல்**
**பட்டயம் மற்றும் சான்றிதழ்**

**நிறுவனம்:** **டேனியல் கல்வி சமூக அறக்கட்டளை, தஞ்சாவூர்**

**தொடர்பாளர்:** டாக்டர். **டேனியல் அமலதாஸ்**
04362 - 276274

**சேர்க்கைக்கான காலம்:** நாட்காட்டியாண்டு- ஜனவரி 1 முதல் பிப்ரவரி 28 வரை
கல்வியாண்டு - ஜுலை 1 முதல் ஆகஸ்டு 31 வரை

**பொது மையங்களுக்கான ஊக்கத்தொகை:** (மைய சேர்க்கை மட்டும்) மாணவர் ஒன்றுக்கு ரூ.1000/-
( டேனியல் அறக்கட்டளையைச் சார்ந்தது)

**கல்வித் தகுதி:**

| பாடப்பிரிவு | கல்வித்தகுதி | பயிற்றுமொழி |
|---|---|---|
| **பட்டயம்** (ஓராண்டு) | | |
| அக்குபங்சர் -419 (Acupuncture) | +2 தேர்ச்சி அல்லது அதற்கு இணையான தகுதி | தமிழ்/ஆங்கிலம் |
| **சான்றிதழ்** (ஓராண்டு) | | |
| அக்குபங்சர் (Acupuncture)-506 | பத்தாம் வகுப்பு / அதற்கு இணையான தகுதி | தமிழ்/ஆங்கிலம் |

**தொடர்பு வகுப்புகள்:** **டேனியல் கல்வி சமூக அறக்கட்டளை நிறுவனத்தாலேயே** தொடர்பு வகுப்புகள் நடத்தப்பெறும். இவ்விவரம் அந்நிறுவனத்தால் மாணவர்களுக்குத் தனியே தெரிவிக்கப்பெறும்.
மாதந்தோறும் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் தொடர்பு வகுப்புகள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும். கம்பம் அகாடமி மையங்களிலும் நடைபெறும்.

**தேர்வு விவரம்**: தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வித் தேர்வுப் பிரிவினால் தெரிவிக்கப்பெறும்.

**கட்டண விவரம்:** பிற பொதுப் பாடப்பிரிவுகளின் கல்விக் கட்டண விவரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4.**

**பாடப்பிரிவுகள்: வரைகலை மற்றும் வண்ணக்கலை**
**(Drawing and Painting)**
**பட்டயம் மற்றும் சான்றிதழ்**

| | | |
|---|---|---|
| **நிறுவனம்:** | | **களஞ்சியம் அறக்கட்டளை, திருச்சிராப்பள்ளி** |
| **களஞ்சியம் அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர்** | : | **திரு ச.செல்வகுமார்**<br>98424 78990 |
| **சேர்க்கைக்கான காலம்** | : | நாட்காட்டியாண்டு- ஜன. 1 முதல் பிப்ரவரி 28 வரை<br>கல்வியாண்டு - ஜுலை 1 முதல் ஆகஸ்டு 31 வரை |
| **பொது மையங்களுக்கான ஊக்கத்தொகை:**<br>(மைய சேர்க்கை மட்டும்) | | மாணவர் சேர்க்கை ஒன்றுக்கு ரூ.1000/-<br>(களஞ்சியம் அறக்கட்டளையைச் சார்ந்தது) |

**கல்வித்தகுதி:**

| | பாடப்பிரிவு | கல்வித்தகுதி | பயிற்றுமொழி |
|---|---|---|---|
| 1. | **பட்டயப்** படிப்பு | பத்தாம் வகுப்புத் தேர்ச்சி அல்லது இணையான தகுதி | தமிழ் |
| 2. | **சான்றிதழ்** படிப்பு | எட்டாம் வகுப்பு அல்லது இணையான தகுதி | தமிழ் |

**தொடர்பு வகுப்புகள்:** களஞ்சியம் அறக்கட்டளை, திருச்சிராப்பள்ளி நிறுவனத்தால் தொடர்பு வகுப்புகள் மற்றும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறும்.

பட்டயம்: ஆண்டொன்றுக்கு 2 தொடர்பு வகுப்பு மற்றும் 4 செய்முறை வகுப்பு நடைபெறும்.
சான்றிதழ்: ஆண்டொன்றுக்கு 1 தொடர்பு வகுப்பு மற்றும் 2 செய்முறை வகுப்பு நடைபெறும்.

தொடர்பு வகுப்புகள் நடைபெறும் இடம் மற்றும் நாள் களஞ்சியம் நிறுவனத்தால் மாணவர்களுக்குத் தெரிவிக்கப்பெறும்.

**தேர்வு விவரம்**: தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வித் தேர்வுப் பிரிவினால் தெரிவிக்கப்பெறும்.

**கட்டண விவரம்:** பிற பொதுப் பாடப்பிரிவுகளின் கல்விக் கட்டண விவரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

**5.**

| | |
|---|---|
| **பாடப்பிரிவுகள்:** | **சான்றிதழ் - மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மீகம்** |
| | **பட்டயம் - மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மீகம்** |

**நிறுவனம்:** **Rajyoga Education and Research Foundation (Education Wing)**

**ராஜ்யோகா நிறுவன ஒருங்கிணைப்பாளர்:** பி.கே. மிருதன்சயா
02974228101-4

**சேர்க்கைக்கான காலம்:** நாட்காட்டியாண்டு-ஜன. 1 முதல் பிப்ரவரி 28 வரை
கல்வியாண்டு - ஜூலை 1 முதல் ஆகஸ்டு 31 வரை

**பொது மையங்களுக்கான சேர்க்கை ஊக்கத்தொகை:** மாணவர் ஒன்றுக்கு ரூ.1000/-
(நிறுவனத்தையே சார்ந்தது)

**பிற மையம்:** **Rajyoga Education and Research Foundation (Education Wing),**
Brahma Kumaris, Vishwa Shanti Bhavan,
36, Meenakshi Nagar, Behind P&T Nagar,
Madurai-625017
Phone: 9442442476

| பாடப்பிரிவு | கல்வித்தகுதி | பயிற்றுமொழி |
|---|---|---|
| **பட்டயம்** – மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மீகம் | +2 தேர்ச்சி அல்லது இணையான தகுதி | தமிழ் |
| சான்றிதழ் - மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மீகம் | 10ஆம் வகுப்புத் தேர்ச்சி | தமிழ் |

**தொடர்பு வகுப்புகள்:** தொடர்பு வகுப்புகள் மற்றும் செய்முறைப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் இடம் மற்றும் நாட்கள் விவரம் ராஜ்யோகா நிறுவனத்தால் மாணவர்களுக்குத் தெரிவிக்கப் பெறும்.

**தேர்வு விவரம்:** தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வித் தேர்வுப் பிரிவினால் நடத்தப்பெறும்.

**கட்டண விவரம்:** பிற பொதுப் பாடப்பிரிவுகளின் கல்விக் கட்டண விவரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 6. இணையதளவழி கல்வி - முதுநிலை. பட்டயம். சான்றிதழ் பாடப்பிரிவுகள்
## ICT Enabled Programmes

**நிறுவனம்:** **Schoolguru EduServe Private Limited,** Mumbai

**ஸ்கூல்குரு நிறுவன ஒருங்கிணைப்பாளர்:** **Mr. Vipendra Singh**
02266944500

**திட்ட மேலாளர்** **Mr. C. Jerin**
**9176561777**

**சேர்க்கைக்கான காலம்:** நாட்காட்டியாண்டு-ஜன. 1 முதல் பிப்ரவரி 28 வரை
கல்வியாண்டு - ஜூலை 1 முதல் ஆகஸ்டு 31 வரை

**மைய முகவரி :** **Schoolguru EduServe Private Limited,**
903, Western Edge II, Western Express Highway,
Borivali (E), Mumbai - 400066.
Phone: 02266944500/ 7339136847

| பாடப்பிரிவு | கல்வித்தகுதி | பயிற்றுமொழி |
|---|---|---|
| **சான்றிதழ்** – வேலைவாய்ப்புத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி | +2 தேர்ச்சி அல்லது இணையான தகுதி | ஆங்கிலம் |
| **சான்றிதழ்** - GST வரி | 10ஆம் வகுப்புத் தேர்ச்சி | ஆங்கிலம் |
| அனைத்துப் பாடப்பிரிவுகள் | காண்க பக்கம் (3-6) | |

**தொடர்பு வகுப்புகள்:** இணையவழியிலேயே நடத்தப்பெறும்

**தேர்வு விவரம்**: தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வித் தேர்வுப் பிரிவினால் தெரிவிக்கப்படும்.

**கட்டண விவரம்:** பிற பொதுப் பாடப்பிரிவுகளின் கல்விக் கட்டணத்தினைப் போன்றது.

7.

**பாடப்பிரிவுகள்: இசை, பரதநாட்டியம், கருவி இசை - பட்டயம் மற்றும் சான்றிதழ்**
**இசை ஆசிரியர் பயிற்சி, பரதநாட்டிய ஆசிரியர் பயிற்சி, மேடைநிகழ்ச்சித் தொகுப்பு, நட்டுவாங்கம் - பட்டயம்**

**நிறுவனம்:** **தமிழ் இசைக் கல்லூரி, சென்னை**

**நிறுவன ஒருங்கிணைப்பாளர் :** **திரு அரு. நாச்சியப்பன்**
944925880, 044 25341425/25330350

**சேர்க்கைக்கான காலம்:** நாட்காட்டியாண்டு-ஜன. 1 முதல் பிப்ரவரி 28 வரை
கல்வியாண்டு - ஜுலை 1 முதல் ஆகஸ்டு 31 வரை

**மைய முகவரி :** **தமிழ்இசைக் கல்லூரி,**
**தமிழ் இசைச் சங்கம்,**
ராஜா அண்ணாமலை மன்றம்,
5, எஸ்பிளனேடு சாலை, சென்னை - 600108.
போன் - 044 2534125/25330350, 9444925880

| பாடப்பிரிவு | கல்வித்தகுதி | பயிற்றுமொழி |
|---|---|---|
| **பட்டயப் படிப்பு** (1 ஆண்டு)<br>1. **பரதநாட்டியம்** | பத்தாம் வகுப்புத் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் பரதநாட்டியத்தில் முழுமார்க்கம் (அலாரிப்பு முதல் தில்லானா வரை) தெரிந்திருக்க வேண்டும் | தமிழ்-ஆங்கிலம் |
| 2. **இசை** | பத்தாம் வகுப்புத் தேர்ச்சி (அ) இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் தமிழக அரசின் கீழ்நிலைத் தேர்வு பாடத்திட்டம் தெரிந்திருக்க வேண்டும். | தமிழ்-ஆங்கிலம் |
| 3. **கருவி இசை (மிருதங்கம், தவில், வீணை, வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம்)** | பத்தாம் வகுப்புத் தேர்ச்சி (அ) இணையான தகுதியுடன் தொடர்புடைய இசைக்கருவியில் சான்றிதழ் தேர்ச்சி | தமிழ்-ஆங்கிலம் |
| **4. மேடை நிகழ்ச்சித் தொகுப்பு** | மேல்நிலைப்பள்ளி(+2) தேர்ச்சி அல்லது 10+3 தொழில்நுட்பப் பட்டயம் அல்லது +2க்குச் சமமான படிப்புத் தேர்ச்சி | தமிழ்-ஆங்கிலம் |
| **5. நட்டுவாங்கம்** | +2 தேர்ச்சி அல்லது 10+3 ஆண்டு நாட்டியத்தில் பட்டயச் சான்றிதழ் கூடுதல் தகுதியாக நடனத்தில் 5 வருட குருகுல பயிற்சி அல்லது நடனத்தில் சான்றிதழ் அல்லது பட்டயம் தேர்ச்சி(கட்டாயம் இருத்தல் வேண்டும்) அல்லது தொலைக்காட்சியில் A Grade கலைஞராக இருத்தல் வேண்டும். | தமிழ்-ஆங்கிலம் |
| **சான்றிதழ் படிப்பு** | | |
| 6. **பரதநாட்டியம்**<br>(6 மாதங்கள்) | எட்டாம் வகுப்புத் தேர்ச்சி அல்லது இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும் | தமிழ்-ஆங்கிலம் |

| | | |
|---|---|---|
| 7. **இசை** (6 மாதங்கள்) | எட்டாம் வகுப்புத் தேர்ச்சி அல்லது இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும் | தமிழ்-ஆங்கிலம் |
| 8. **கருவி இசை (மிருதங்கம். தவில்)** | எட்டாம் வகுப்புத் தேர்ச்சி அல்லது இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும் | தமிழ்-ஆங்கிலம் |
| **ஆசிரியர் பயிற்சி படிப்பு**(ஓராண்டு) | | |
| 9. **பரதநாட்டியம்** | மேல்நிலை வகுப்புத் (+2) தேர்ச்சி மற்றும் தொடர்புடைய துறையில் சான்றிதழ் படிப்புத் தேர்ச்சி | தமிழ்-ஆங்கிலம் |
| 10. **இசை** | மேல்நிலை வகுப்புத் (+2) தேர்ச்சி மற்றும் தொடர்புடைய துறையில் சான்றிதழ் படிப்புத் தேர்ச்சி | தமிழ்-ஆங்கிலம் |

**தொடர்பு வகுப்புகள்:** தமிழ் இசைக் கல்லூரி நிறுவனத்தால் தொடர்பு வகுப்புகள் நடத்தப்படும். இதன் விவரம் அந்நிறுவனத்தால் மாணவர்களுக்குத் தனியே தெரிவிக்கப்பெறும்.

**தேர்வு விவரம்**: தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வித் தேர்வுப் பிரிவினால் தெரிவிக்கப்படும்,

**கட்டண விவரம்:** பிற பொதுப் பாடப்பிரிவுகளின் கல்விக் கட்டண விவரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 8. பாடப்பிரிவுகள்:

**வைணவம், ஸ்ரீபாஷ்யம்** - முதுநிலைப் பட்டயம், **தமிழ்இலக்கியங்களில் வைணவக் கூறுகள் , வைணவ உரைகள், இலக்கிய நோக்கில் திவ்யபிரபந்தம், ஒப்பிலக்கியம் தேவாரம் திவ்யபிரபந்தம், ஸ்ரீராமானுஜர்** - பட்டயம், **ஆழ்வார்கள் ஆச்சார்யர்கள் வாழ்வும் பணியும், வைணவ ஆலயங்களில் கல்வெட்டுகள், வேதங்கள் வேதாந்தங்கள், வைணவம்** - சான்றிதழ்

**நிறுவனம்:** **அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்**

**தொடர்பாளர்:** **பொ. ஜெயராமன்**

**சேர்க்கைக்கான காலம்:** நாட்காட்டியாண்டு- ஜனவரி 1 முதல் பிப்ரவரி 28 வரை
கல்வியாண்டு - ஜுலை 1 முதல் ஆகஸ்டு 31 வரை

**மைய முகவரி:** **அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்,**
**ஆழ்வார்கள் ஆச்சார்யர்கள் ஆய்வு மையம்**
ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி – 6
தொ.பே: 0431-2432246

**பொது மையங்களுக்கான ஊக்கத்தொகை:** கல்விக் கட்டணத்தில் 5%
(சேர்க்கை மட்டும்) (நிறுவனத்தைச் சார்ந்தது)

| பாடப்பிரிவு | கல்வித்தகுதி | பயிற்றுமொழி |
|---|---|---|
| **முதுநிலைப் பட்டயம்** (ஓராண்டு)<br>1, வைணவம்<br>2. ஸ்ரீபாஷ்யம் | குறைந்தபட்சம் ஏதேனும் 3 ஆண்டுகால இளநிலைப் பட்டப்படிப்பில் தேர்ச்சி | தமிழ் |
| **பட்டயம்** (ஓராண்டு)<br>1. தமிழ் இலக்கியங்களில் வைணவக் கூறுகள்<br>2. வைணவ உரைகள்<br>3.இலக்கிய நோக்கில் திவ்யபிரபந்தம்<br>4. ஒப்பிலக்கியம். தேவாரம். திவ்யபிரபந்தம்<br>5. ஸ்ரீராமானுஜர் | 10ம் வகுப்புத் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது | தமிழ் |
| **சான்றிதழ்** (6 மாதங்கள்)<br>1. வைணவம்<br>2. ஆழ்வார்கள் ஆச்சார்யர்கள் வாழ்வும் பணியும்<br>3. வைணவ ஆலயங்களில் கல்வெட்டுகள்<br>4. வேதங்கள், வேதாந்தங்கள் | 8ம் வகுப்புத் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானது | தமிழ் |

**தொடர்பு வகுப்புகள்:** தொடர்பு வகுப்புகள் மற்றும் செய்முறைப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் இடம் மற்றும் நாட்கள் விவரம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம். நிறுவனத்தால் மாணவர்களுக்குத் தெரிவிக்கப்பெறும்.

**தேர்வு விவரம்**: தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வித் தேர்வுப் பிரிவினால் தெரிவிக்கப்படும்.

**கட்டண விவரம்:** பிற பொதுப் பாடப்பிரிவுகளின் கல்விக் கட்டண விவரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொடர்பு வகுப்புகள் விவரம்

| எண் | பாடம் | நடைபெறும் நாட்கள் | வருகைப் பதிவு | மையம் |
|---|---|---|---|---|
| 1. | எம்.எஸ்சி., எம்.பி.ஏ., பி.ஜி.டி.சி.ஏ தவிர பிற முதுநிலைப்பட்டயம்/முதுநிலைப் பாடங்கள் | 8 நாள்கள் | -- | தமிழ்ப் பல்கலைக்கழகம் |
| 2. | எம்.எஸ்சி., எம்.பி.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | 8 நாள்கள் | கட்டாயம் | |
| 3. | பட்டயம்<br>பட்டயம் யோகா ஆசிரியர் பயிற்சி | 4 நாள்கள்<br>5 நாள்கள் | கட்டாயம்<br>கட்டாயம் | |
| 4. | சான்றிதழ் | 4 நாள்கள் | கட்டாயம் | |
| 5. | அடிப்படைக்கல்வி பாடப்பிரிவுகள் | 4 நாள்கள் | -- | |

## செய்முறைப் பயிற்சி வகுப்புகள்

| | |
|---|---|
| 1. முதுநிலை புவியியல், உளவியல், எம்.ஏ. யோகா, தாவரவியல் | தமிழ்ப் பல்கலைக்கழகத் தொழில் மற்றும் நில அறிவியல், தத்துவ மையம் துறையில் நடைபெறும். |
| 2. பட்டயம் | |
| 1. யோகா ஆசிரியர் பயிற்சி | தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையத்தில் நடைபெறும். |
| 2. மூலிகை அறிவியல் | தமிழ்ப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத் துறையில் நடைபெறும். |
| 3. மருத்துவ மூலிகை அழகுக் கலை | தமிழ்ப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத் துறையில் நடைபெறும். |
| 4. மரபு வழித் தமிழ் மருத்துவம் | தமிழ்ப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத் துறையில் நடைபெறும். |
| 5. இசை/பரத பாடப்பிரிவுகள் | தமிழ்ப் பல்கலைக்கழக இசைத் துறையில் நடைபெறும். |
| 3. சான்றிதழ் | |
| 1. தமிழ்ப் புலவர் பயிற்சி | கற்போர்கள், தங்கள் சொந்த ஊர்களில் உள்ள பள்ளிகளில் இரு வாரங்கள் வகுப்பு எடுத்து, எட்டுப் பதிவேடுகளை நிறைவு செய்து அந்தந்தப் பள்ளியின் தலைமையாசிரியரின் ஒப்பம் பெற்றுத் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தில் நடைபெறும் வாய்மொழித் தேர்வின் போது அளித்தல் வேண்டும்.<br>(இதற்கு 200 மதிப்பெண்கள்) |
| செய்முறைத் தேர்வு | தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடத்தப் பெறும்<br>(100 மதிப்பெண்கள்) |
| 4. நூலகம் மற்றும் தகவலறிவியல் | தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் நடைபெறும். |
| 5. பி.ஜி.டி.சி.ஏ., பி.ஜி.டி.டபிள்யூ.எஸ்., | தமிழ்ப் பல்கலைக்கழகக் கணிப்பொறிஅறிவியல் துறையில் நடைபெறும் |

**கற்றல் உதவி மையவழி சேர்க்கை பெற்ற முதுநிலை மாணவர்களுக்கு தொடர்பு வகுப்புகள் மற்றும் செய்முறைப் பயிற்சி வகுப்புகள் அந்தந்த கற்றல் உதவி மையங்களிலேயே நடத்தப்பெறும்.**

# முகவரி மாற்ற விண்ணப்பப் படிவம்

அனுப்புநர் நாள்:...............................

மாணவர் பெயர்,
சேர்க்கை எண்
முழு முகவரி மற்றும் அஞ்சல் குறியீட்டு எண்
தொலைபேசி எண்
கைபேசி எண்

பெறுநர்

**இயக்குநர்**
தொலைநிலைக்கல்வி இயக்ககம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 010

ஐயா,

பொருள்: முகவரி மாற்றம் தெரிவித்தல் – தொடர்பாக.

--------

நான் கீழ்க்காணும் புதிய முகவரிக்கு எனது இருப்பிடத்தை மாற்றியுள்ளேன். எனவே இனி வருங்காலத்தில் எனது படிப்புத் தொடர்பான கடிதங்கள்/ மற்றத் தகவல்களைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு வேண்டுகிறேன்.

| **பழைய முகவரி** | **புதிய முகவரி** |
|---|---|
| .............................................................................................. | .............................................................................................. |
| .............................................................................................. | .............................................................................................. |
| .............................................................................................. | .............................................................................................. |
| .............................................................................................. | .............................................................................................. |
| .............................................................................................. | .............................................................................................. |
| அஞ்சல் எண் | அஞ்சல் எண் |
| தொலைபேசி எண் | தொலைபேசி எண் |
| கைபேசி எண் | கைபேசி எண் |

இத்துடன் முகவரி மாற்றத்திற்குரிய கட்டணம் ரூ.100/-க்கான வரைவோலை இணைத்துள்ளேன்.

வங்கியின் பெயர்/கிளை ..........................................................................................வரைவோலை எண் ...................... நாள் ...............

நன்றி

தங்கள் உண்மையுள்ள

---

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்

அலுவலகக் குறிப்பு நாள் ...............................

திரு /திருமதி ........................................................................................................ அவர்களின் முகவரி மாற்றம் குறித்த விண்ணப்பம் ஏற்கப்படுவது குறித்துக் கருதலுக்கு.

உதவியாளர் கண்காணிப்பாளர் உதவி இயக்குநர் துணைப்பதிவாளர் இயக்குநர்

# கல்விக் கட்டணம் செலுத்திய படிவம்

அனுப்புநர் நாள்:..........................................

மாணவர் பெயர்,
சேர்க்கை எண்
முழு முகவரி மற்றும் அஞ்சல் குறியீட்டு எண்
தொலைபேசி எண்
கைபேசி எண்:

பெறுநர்

**இயக்குநர்**
தொலைநிலைக்கல்வி இயக்ககம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-613 010

ஐயா,

பொருள்: கல்விக் கட்டணம் செலுத்தியமை – தொடர்பாக.
--------------

இத்துடன் எனது முழுக் கல்விக் கட்டணம் செலுத்திய செலுத்துச்சீட்டை இணைத்துள்ளேன்.

---

**கல்விக் கட்டணம் செலுத்திய விவரம்**

| | | | |
|---|---|---|---|
| மாணவர் பெயர் | : | தொகை | : |
| சேர்க்கை எண் | : | வங்கியின் பெயர் | : |
| பாடப்பிரிவு | : | செலுத்துச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளதா: | |
| ஆண்டு (முதல்/இரண்டு/மூன்று) | : | செலுத்துச்சீட்டு நாள் | : |

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

( )

இணைப்பு: மேற்குறிப்பிட்டவாறு

## குறை தீர்ப்பு விண்ணப்பம்*

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் -613 010
## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

நாள்:...............................

அனுப்புநர்

மாணவர் பெயர்,
சேர்க்கை எண்
முழு முகவரி மற்றும் அஞ்சல் குறியீட்டு எண்
தொலைபேசி எண்
கைபேசி எண்:

பெறுநர்

**குறை தீர்ப்பு மையம்**
தொலைநிலைக்கல்வி இயக்ககம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 010

| குறை (விரிவாக) |
|---|
| மாணவர் கையொப்பம் |

### அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்

நடவடிக்கை எடுத்த விவரம்:

உதவியாளர் | கண்காணிப்பாளர் | உதவி இயக்குநர் | துணைப்பதிவாளர் | இயக்குநர் (பொ)

* இப்படிவத்தினை நகலெடுத்தும் பயன்படுத்தலாம்

## மாணவர்தம் சொந்தப் பயன்பாட்டிற்கு

1. விண்ணப்ப எண் :

2. சேர்க்கை பெற்ற விவரம்

அ. தமிழ்ப் பல்கலைக்கழக அலுவலகத்தில் (நேரில்) :

ஆ. கல்வி மற்றும் தகவல் மையம் மூலமாக (மைய விவரம்) :

3. விண்ணப்பம்/ சான்றிதழ்கள் நகல்களுடன் அனுப்பப்பட்ட நாள் :

4. சேர்க்கை செய்யப்பெற்ற நாள் :

5. :

| கட்டணம் செலுத்திய விவரம் | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு |
|---|---|---|---|
| வங்கியின் பெயர் செலுத்துச்சீட்டு/எண்/நாள் | | | |
| வங்கி வரைவோலை எண்/ நாள் | | | |
| இயக்ககத்திற்கு அனுப்பிய நாள் | | | |

6. சேர்க்கை எண் :

7. அடையாள அட்டை பெறப்பட்ட நாள் :

| 8. பாடங்கள் பெறப்பட்ட விவரம் | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு |
|---|---|---|---|
| பெறப்பட்ட நாள் | | | |

| 9. தொடர்பு வகுப்புகளில் பங்கேற்ற விவரம் | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு |
|---|---|---|---|
| | | | |

| 10. தேர்வு விண்ணப்பப் படிவம் பெற்ற நாள் | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு |
|---|---|---|---|
| மே மாதத் தேர்விற்கு | | | |
| டிசம்பர் மாதத் தேர்விற்கு | | | |

11. தேர்வுக் கட்டுப்பாட்டாளருக்குத் தேர்வு விண்ணப்பம் அனுப்பிய விவரம்:

| | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு |
|---|---|---|---|
| **மே மாதத் தேர்விற்கு**<br>தேர்வுக் கட்டணம் செலுத்தியது | | | |
| வரைவோலை எண் மற்றும் நாள் | | | |
| வங்கிப் பெயர் மற்றும் எண் | | | |
| அனுப்பிய நாள், சாதாரண அஞ்சல்/<br>பதிவு அஞ்சல் விவரம் | | | |
| **டிசம்பர் மாதத் தேர்விற்கு**<br>தேர்வுக் கட்டணம் செலுத்தியது | | | |
| வரைவோலை எண் மற்றும் நாள் | | | |
| வங்கிப் பெயர் மற்றும் எண் | | | |
| அனுப்பிய நாள், சாதாரண அஞ்சல் /<br>பதிவு அஞ்சல் விவரம் | | | |

| 12. மதிப்பெண் சான்றிதழ் பெற்ற நாள் | முதல் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு |
|---|---|---|---|
| மே மாதத் தேர்வு | | | |
| டிசம்பர் மாதத் தேர்வு | | | |

13. தற்காலிகச் சான்றிதழ் (Provisional Certificate) பெற்ற நாள்:

14. பட்டமளிப்பு விழாவிற்கு விண்ணப்பம் அனுப்பிய விவரம் :

செலுத்திய தொகை ரூ.

வங்கியின் பெயர்

கிளை

வரைவோலை எண் மற்றும் நாள்

15. பட்டம்/பட்டயம்/சான்றிதழ் பெறப்பட்ட நாள்:

16. இதர விவரங்கள் தொடர்பாகத் தொலைநிலைக்கல்வி இயக்ககத்திற்கு அனுப்பப்பட்ட விவரங்கள்

அ. இ.

ஆ. ஈ.

## தமிழ்ப் புலவர் பயிற்சி பாடப்பிரிவு கற்பித்தல் பயிற்சி மேற்கொள்வதற்கான படிவம்

அனுப்புநர் நாள்:..........................................

மாணவர் பெயர்,
சேர்க்கை எண்
முழு முகவரி மற்றும் அஞ்சல் குறியீட்டு எண்
தொலைபேசி எண்
கைபேசி எண்:

பெறுநர்

**இயக்குநர்**
தொலைநிலைக்கல்வி இயக்ககம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-613 010

ஐயா,

பொருள்: தமிழ்ப் பாடப்பிரிவு – 10 நாள்கள் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள அனுமதி கடிதம் கோருதல் – தொடர்பாக.

--------------

நான் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககவழி நடத்தப்பெறும் தமிழ்ப் புலவர் பயிற்சி – சான்றிதழ் பாடப்பிரிவில் சேர்ந்து படித்து வருகிறேன். எனது சேர்க்கை எண் ........................................................................ ஆகும். தொடர்பு வகுப்புகள் முடிவுற்றதும் மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய கற்பித்தல் பயிற்சியைக் கீழ்க்காணும் பள்ளியில் மேற்கொள்ள விழைகிறேன்.

எனவே இப்பள்ளியில் கற்பித்தல் பயிற்சியை மேற்கொள்ள ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி.

கற்பித்தல் பயிற்சி பெற விரும்பும்
பள்ளி முகவரி(வட்டம்,மாவட்டம் உள்பட)

தங்கள் உண்மையுள்ள,

( )



## குறிப்புகள்